Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது சித்திரை 4 ஆம் நாள் துல்கஃதா 22 (17-4-63) புதன்கிழமை இதழ் 67

# "வடக்கு, கிழக்கில் தமிழில் நிர்வாகம் சில இடங்களில் சிங்களமும் அமுலாகவேண்டும்"

## எம். ஈ. பி., கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே உடன்பாடு?

கொழும்பு, செவ்வாய்

**வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ் பிரதேச மொழியாக இருக்கவேண்டுமென்றும், நீதிமன்றங்களிலும் நிர்வாகத்துறையிலும் இங்கு தமிழ் மொழியே உபயோகிக்கப்படவேண்டுமெனவும் மக்கள் ஐக்கிய முன்னணி (எம். ஈ. பி.)யும் கம்யூனிஸ்ட்கட்சியும் உடன்பாட்டுக்கு வந்துள்ளதாகத் தெரிகிறது.**

மொழிப்பிரச்னை சம்பந்தமாக கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் இடையே ஏற்பட்டுள்ள உடன்பாட்டின்படி அரசகரும மொழியாக சிங்களம் மட்டுமே இருக்கவேண்டுமெனவும் வடக்கு கிழக்கு பகுதிகளில் பிரதேச மொழியாக தமிழ் இருக்க வேண்டுமெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

சொக்ஸி கமிஷன் அறிக்கையின் சிபார்சுகளின் பிரகாரம் ஸ்தலஸ்தாபனங்களுக்கு அதிகாரங்கள் விஸ்தரிக்கப்படவேண்டுமெனவும் இருகட்சிகளும் உடன்பாடு தெரிவித்துள்ளனவாம்.

மத்திய அரசாங்கத்தின் நிர்வாக மொழி சிங்களமாக இருக்கவேண்டுமெனவும் வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள அப்பீல் நீதிமன்றங்களில் சிங்கள மொழி உபயோகிக்கப்படவேண்டுமெனவும் இக் கட்சிகளிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் என்பதற்குப் பதில் "வடக்கு கிழக்குப் பகுதிகள்" என்ற பதம் உபயோகிக்கப்பட்டதன் காரணம், இந்தப் பகுதிகளில் தமிழர்களுடைய பகுதிகளுக்கு பக்கத்தில் சிங்களவர்களும் வாழ்கிறார்கள் என்பதாலும் சிங்களவர்கள் மட்டும் வாழும் இடங்களில் உள்ளூர் ஆட்சி மன்றங்களில் சிங்களமொழியே உபயோகத்தில் இருக்கவேண்டுமென்பதாலுமேஎன கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரூ. 25,000 பெறுமான சேலைகள் களவு!

## கூ. மொ. வி. ஸ்தாபனத்தில் 'புதுவருடப்பிறப்பு'

கொழும்பு, செவ்வாய்

**கொழும்பு மக்கலம் வீதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனமொன்றில் ரூபா 25,000 பெறுமதியான சேலைகள் களவாடப்பட்டுவிட்டதாக பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.**

புதுவருட தினத்தன்று இத் திருட்டு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் ஏப்ரல் 13-ந் திகதி புதுவருடதின விடுமுறையை யொட்டி பூட்டப்பட்டதாகவும் இன்று காலை திறக்கப்பட்டபோது சேலைகள் திருட்டுப்போய் விட்டதாகக் காணப்பட்டதாகவும் பொலிசாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிசார் இதுசம்பந்தமாக புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

# 23-ம் திகதி மாநகரசபையின் விசேஷ கூட்டம்

## மேயர் பதவிநீக்கப் பிரேரணை மீது விவாதம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**யாழ்ப்பாணத்தின் புதியமேயர் திரு. பி. எம். ஜோன் மீது எட்டு அங்கத்தவர்கள் கொண்டுவந்துள்ள பதவிநீக்கப் பிரேரணையை விவாதிப்பதற்காக மாநகரசபையின் விசேஷகூட்டத்தை இம்மாதம் 23-ம் திகதி மாநகரசபைக் கமிஷனர் திரு .டி. டி. ஜயசிங்கா கூட்டுகிறார்.**

மாநகரசபைகளின் 1947-ம் வருடத்தியசட்டத்தின் 29-வது இலக்க 18-வது (2) ஏ. பி. பிரிவினது கீழும் 1956-ம் வருடத்திய திருத்தச் சட்டத்தின் 25-வதுபிரிவின்கீழும் இந்த பதவிநீக்கப் பிரேரணைக்கு எட்டு அங்கத்தவர்களும் கையெழுத்திட்டு முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

இந்த பதவிநீக்கப் பிரேரணையை ஆலோசிப்பதற்காக மாநகரசபையின் விசேஷ கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று திருவாளர்கள் எஸ். இராசரத்தினம், எம். ஜேக்கப், பீ. ச. சோமசுந்தரம், தா. ச. துரைராசா, நா. த. செல்லத்துரை, டாக்டர் ச. அ. தருமலிங்கம், திரு. ஜே. எஸ். அழகையா, திரு. அ. நடராசா ஆகிய எட்டுப்பேர்களுமே கோரியுள்ளனர்.

23-ம் திகதி நடைபெறவிருக்கும் விசேஷ கூட்டத்தில் பதவிநீக்கப்பிரேரணையை மூன்றும் வட்டார அங்கத்தவர் திரு. எம். ஜேக்கப் பிரேரிப்பார்.

## திரு. கே.ஸி. தங்கராஜா

கொழும்பு, செவ்வாய்

கனடா அரசாங்கத்தின் அழைப்பின்மீது, அங்குநடைபெற்ற பொருட்காட்சியைப் பார்வையிடச் சென்றிருந்த திரு. கே. ஸி தங்கராஜா, சிங்கப்பூர் மார்க்கமாக நேற்று மாலை கொழும்பு திரும்பினா்.

—

## தீவுப்பகுதிகளில் எம். பி. சுறுசுறுப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

அனலைதீவு, எழுவதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய நான்கு தீவுகளிலும் கமத்தொழில் சங்கம், கைத்தொழிற்சங்கம், கடற்றொழில் சங்கம் ஆகியவை நடைபெற ஒழுங்குசெய்திருப்பதாக தீவுப்பகுதி எம். பி திரு வி. ஏ. கந்தையா கூறினார்.

—

## ரஷ்ய கோஷ்டி புறப்பட்டது

கொழும்பு, செவ்வாய்

கடந்த 13-ம் திகதி இலங்கை வந்த ரஷ்ய வைத்திய ஊழியர் சங்கத் தூதுகோஷ்டி இன்று ரஷ்யா புறப்பட்டது.

# "மொழியைவிட நாட்டின் ஒற்றுமையே முக்கியம்"

## காங்கிரஸ் எம். பி. க்கள் கூட்டத்தில் நேரு வலியுறுத்து

புதுடில்லி, ஏப்ரல் 16

ராஜ்யங்களில் மும்மொழித் திட்டம் அமுலாகும் நிலைமை பற்றி டில்லியில் கூடிய 5 கல்வி மந்திரிகள் கமிட்டி நேற்றுப் பரிசீலித்தபின், தனது 2 நாள் கூட்டத்தை முடித்துக்கொண்டது. எல்லா ராஜ்யங்களிலும் ஒரே விதமாகத் திட்டம் அமுல் நடத்தப்பட வேண்டுமெனக் கமிட்டி தீர்மானித்தது. செகண்டரி கல்வியை முடித்த மாணவர்கள், மும்மொழிகளில்தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. மத்திய கல்விமந்திரி டாக்டர் ஸ்ரீமாலி கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

ஹிந்தி பேசும் பகுதிகளில் மூன்றாவது மொழியாக ஒரு இந்திய மொழியைக் கற்கவேண்டும் என்பது கட்டாயமாக்கப்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இன்றுநடைபெற்ற காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் பிரதமர் நேரு பேசுகையில், பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டிருக்கும் ஆங்கில நீடிப்பு மசோதா நியாயமானது என்றார். மொழியைவிட நாட்டின் ஒற்றுமையே முக்கியம் என்றும், ஆங்கிலத்தைநீடிப்பது என்று அரசாங்கம் ஏற்கனவே கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியே ஆகவேண்டும் என்றும் அவர் கூறினார். வடநாட்டு மக்கள், தென்னாட்டு மக்கள் மீது ஆதிக்கம் செலுத்த முயல்கிறார்கள் என்ற எண்ணம் இருக்கக்கூடாது என்றும், பலவந்தமாக ஹிந்தியைத் திணிப்பதால் அந்த மொழியின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்றும் நேரு கூறினார்.

—

## உபஜனாதிபதிக்கு "பாரத ரத்தினம்"

புதுடில்லி, ஏப்ரல் 16

நாளை ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் விருதுகளை வழங்குவார். "பாரதரத்னம்" விருதுகளைப் பெறுபவர்களில் உபராஷ்டிரபதி டாக்டர் ஸகீர் ஹூஸெய்னும் ஒருவராய் இருப்பார்.

3 பேருக்கு "பத்மபூஷன்" விருதுகள் வழங்கப்படும். "பத்மஸ்ரீ" விருதுகளும் பலருக்கு வழங்கப்படும்.

3 வருஷ டிப்பசிட் வட்டி

8%

சிலோன் றிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

வரி விளம்பரம்

## தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணானந்தர்
கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## நாவலர் ஞாபகார்த்த தமிழ் சம்ஸ்கிருத சமய உயர்தர வகுப்புக்கள்

வண்ணார்பண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நிகழும் சித்திரை மாசத்தில் மேற்குறிப்பிட்ட வகுப்புக்கள் ஆரம்பமாகும். வைதிக சைவ சாத்திரங்கள் இலக்கியங்கள் கருவி நூல்கள் தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் அவ்வகுப்புக்களிற் கற்பிக்கப்படும். பிராமண சைவ குருமரபினர், ஏனைய மாணவர், ஆசிரியர் என்றற்றொடக்கத்தவர்கள் தத்தமக்கேற்ற வகுப்புக்களிற் சேரலாம். வேதனம் இல்லை. வேறு உதவிகளும் சிந்திக்கப்படும். விபரங்களை மேற்படி வித்தியாசாலைத் தலைமையாசிரியரிடம் நேரில் அறிந்துகொள்ளலாம்.

மேற்குறித்த வகுப்பு ஒழுங்குகளை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கவனித்துவருகின்றார்கள்.

தர்மகர்த்தா சபை.
நாவலர் வித்தியாசாலை,
யாழ்ப்பாணம்.

## ஈஸ்டர் பண்டிகைக்கு ரூ. 10 கோடி இனிப்பு

லண்டன், ஏப். 15

யேசுநாதர் உயிர்த்தெழுந்த நாளைக் கொண்டாடும் ஈஸ்டர் விழா ஞாயிறன்று இங்கிலாந்தில் வழக்கம் போல் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பிரித்தானியர் "ஈஸ்டர் முட்டைகள்" எனப்படும் இனிப்புக் கேக்குகளை நண்பர்களுக்கு அன்பளிப்பாகத் தந்து உண்பது வழக்கம். இந்த இனிப்புக் கேக்குகளுக்கென இந்த ஆண்டு 7500தொன் சாக்லேட் உபயோகிக்கப்பட்டுள்ளது. பொதுவாக பிரித்தானியர் வாரகத்துக்குச் சராசரி 8 அவுன்சு இனிப்புப் பண்டங்களை உண்கின்றனர். ஈஸ்டர் இனிப்புக் கேக் இந்த ஞாயிற்றுக்கிழமைக்குள் 10 கோடி விற்பனையாகின. இவற்றின் மதிப்பு சுமார் ரூ. 10 கோடியாகும்.

## ஆபாச சினிமா

### மந்திரி தலைமையில் எதிர்ப்பு

சினிமாப்படங்களிலும் கலைகளிலும் ஆபாசத்தை புகுத்துவதை எதிர்த்து ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் இளைஞர்கள் இயக்கம் ஆரம்பித்துள்ளனர்.

இதையொட்டி மட்டரகக் கலை, ஆபாச சினிமா ஒழிப்பு தினம் சமீபத்தில் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்துக்குஒரிஸ்ஸா ராஜயகலாசார விவகார மந்திரியான எஸ்.கே. சாகு தலைமை வகித்தார். இளம் மந்திரியான சாகு இக்கூட்டத்தில் பேசுகையில் மக்களின் கலாரசனையையும், கலாசாரத்தையும் பிரதிபலிப்பதாக இருக்கும் வகையில் கலைகளும் சினிமாப்படங்களும் உயர்ந்த லட்சியப்போக்குடன் தரமுள்ளவையாக இருக்கவேண்டும் என்றார்.

### விற்பனைக்கு

கொழும்புத்துறை பிள்ளையார் கோவிலுக்கும் யோக சுவாமியார் இல்லத்துக்கும் அருகாமையில் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கீழ்க் காணும் விலாசத்திற்கு மயாழன் 18-4-63க்குமுன் விண்ணப்பிக்கவும்.

பாலசுப்பிரமணியம், 42,சாப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
910

# "சுயமுயற்சியால் நாம் முன்னேற வேண்டும்"

## உபதபாற்கந்தோர் திறப்பு விழாவில் பேச்சு

சுழிபுரம், செவ்வாய்

தொல்புரம் உபதபாற் கந்தோர் புதிய கட்டிடத்தை வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் திறந்து வைத்தார்.

திரு. க. கி. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், இத் தபாற்கந்தோர் மிக விரைவில் வளர்ச்சியடைந்ததையிட்டு நாம் பாராட்டுவதாகவும் இதற்கு எல்லாம் இவ்வூர் கிராமவாசிகளின் உதவியே காரணமென்றும் மக்களின் தேவையை அறிந்து வேண்டிய உதவியை புரிவதே ஆட்சி பீடத்தின் கடமையென்றும் கூறினர்.

நாம்எதற்கும்அரசாங்கத்தை எதிர்பாத்துக் கொண்டு இருக்காமல் எமது சுய முயற்சியால் முன்னேற வேண்டும். இன்றைய நிலையில் அரசாங்கம் எந்த விதமான உதவிகளையும் செய்ய முடியாமல் இருக்கின்றது. இதற்கு இரண்டு காரணம் உள்ளது. ஒன்று. அரசாங்கம் எமது தேவையை பூர்த்தி செய்வதற்கு நிதி இல்லாமையும் மற்றது, எம்மீது கொண்டுள்ள மாற்றாந் தாய் மனப்பான்மையாகும் என்றும் அவர் கூறினர்.

மேலும் அவர் கூறியதாவது, எமது பகுதிலுள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்களின் உண்மையான உழைப்பின் காரணமாகவே எமது தேவைகள் சில பூர்த்தியாக்கப்பட்டு வருகின்றன. எங்களின் அதி முக்கிய தேவைகளை பூர்த்தியாக்குவதற்கு கிராம முன்னேற்ற சங்கம், சனசமூக நிலையங்கள் ஆகியனவை பாடுபடவேண்டும். மேலும் பொருளாதார அபிவிருத்திக்கும் உழைக்க வேண்டும் இதுவரை காலமும் சமூக சேவையில் ஆசிரியர்கள் அதிக ஈடுபாடுடையவர்களாக இருந்து வந்தார்கள். அரசாங்கம் பாடசாலைகளை கையேற்றதால் அவர்கள் சேவை செய்ய முடியாதவர்களாக மாற்றப்பட்டுள்ளார்கள். ஆசிரியர்களின் இடத்தை நிரப்புவதற்கு இளைப்பாறிய உத்தியோகஸ்தர்களும், கமக்காரர்களுமே முன்வரவேண்டியுள்ளது. எம்போன்ற பிரதிநிதிகள் உங்களுக்கு ஒரு வாய்க்கால் போல் இருக்கலாம் நீங்கள் இவ்வாய்க்கால் நீரைப் பாச்சி எமது பொருளாதார வளத்தை பெருக்க முயல வேண்டும்.

வடபகுதி தபால் அதிபர் திரு. கே. நகுலேஸ்வரன் பேசுகையில், இப்பகுதி மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இத் தபால் நிலையம் வளர்ச்சியடைய வேண்டும். அதற்கு மக்கள் இக்கந்தோரில் எல்ல அலுவல்களை நடத்த வேண்டும் என்று கூறினர்.

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாசாலை பாடசாலை தலைமையாசிரியர் திரு. எஸ். சண்முகரத்தினம் பேசுகையில் கூறியதாவது, இத் தபாற் கந்தோர் எமது பாடசாலைக்கு அருகாமையில் இருப்பதால் அதிக பயன் அடைவது எமது பாடசாலையேயாகும். மிக விரைவில் இக்கந்தோருக்கு தொலைபேசி வசதிகள் செய்து தருவதற்கு தபால் அதிபர், பாராளுமன்றப் பிரதிநிதி ஆகியோர் உதவ வேண்டும். திரு. மு. நமசிவாயம் நன்றி கூறினர்.

## அங்கஹீனர் தொகை

லக்னோ, ஏப். 14

உத்திரபிரதேசத்தில் உடலுறுப்பிழந்தோர் 3 லட்சத்து 69 ஆயிரம் உள்ளனர் என்று ராஜ்ய அரசாங்க புள்ளிவிவரக் கணக்குப் பிரிவினர் நடத்திய சர்வேயிலிருந்து தெரியவருகிறது. இவர்களில் 94 சத விகிதம் பேர் கிராமப் புறங்களில் உள்ளனர்.

உடலுறுப்பிழந்தவர்கள் 37 குடும்பங்களுக்கு ஒருவர் வீதம் உள்ளனர் என்றும் இந்த சர்வேயிலிருந்து தெரியவந்துள்ளது.

## இலங்கைக் காக்கைக்கு ஆஸி எதிர்ப்பு

மெல்போர்ன்,ஏப். 15

கப்பல்களின் உயர்ந்த பாய்மரங்களில் ஏறிக்கொண்டு இலங்கையிலிருந்து, ஆஸ்திரேலியாவுக்கு வந்து காக்கைகள் குடியேறுகின்றன. கப்பல்கள் ஆஸ்திரேலியா வந்ததும் நிற்கும் முதல் துறைமுகத்திலிருந்து அவை நாட்டுக்குள் பறந்தோடிவிடுகின்றன. தமது தாயகமான இலங்கையைவிட ஆஸ்திரேலியப் பருவ நிலையும், சூழலும் அவற்றுக்குப் பிடித்திருக்கின்றன. ஆஸ்திரேலியாவின் கிழக்கு மாவட்டங்களில் அவை ஏராளமான அளவில் குஞ்சு பொரித்துத் தாய்நாட்டில் போலவே பல்கிபெருகுகின்றன.

இக் காக்கைகளால் பயிர்பச்சைகளுக்கும், பழங்கள் முட்டைகள் ஆகியனவற்றுச்கும் பெருஞ்சேதம் ஏற்படுவதால் இக காக்கைகளைப் பூண்டோடு அழிக்க ஆஸ்திரேலிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இலங்கைக் காக்கையைக் கொல்பவர்களுக்கு காக்கை ஒன்றுக்கு ரூ. 15 தரப்படும்.

## 'இளைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கவும்'

கோண்டாவில், செவ்.

"கைத்தொழில்களைப் பெருக்குவதற்கு இளைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும். அதற்கு பெற்றோர், கிராம முன்னேற்றச் சங்கங்கள் உறுதுணையாக இருக்கவேண்டும்" என்று கோண்டாவில் மேற்கு கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலைய 24-வது ஆண்டு நிறைவு விழாவில் இரண்டாவது நாள் நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் திரு. சி. பாலச்சந்திரன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ஒவ்வொரு கிராமத்திலும் அங்கு கிடைக்கும் மூலப்பொருட்கள்மூலம் கைத்தொழில்களைத் தொடங்கவேண்டும் என்றும், விவசாயத்தைச் செய்ய முற்படவேண்டுமென்றும் இதற்கு வேண்டிய அறிவையும், ஆற்றலையும் இத்தகைய கிராம முன்னேற்றச் சங்கங்கள்மூலம் இளைஞர்கள் பெறவேண்டும் என்றும் கூறினர்.

திருமதி அமிர்தாம்பிகை சதாசிவம் பேசுகையில் கூறியதாவது:-

"நாம் இனி அரசாங்க உத்தியோகங்களை எதிர்பாராது இத்தகைய கிராம முன்னேற்றச் சங்கங்கள் மூலம் சிறு, சிறு கைத்தொழில்களைச் செய்ய வேண்டும். செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஆங்காங்கே நிலையங்களை அமைக்கவேண்டும். இப்படி நாம் செய்வோமானல் அநேக மக்கள் கைத்தொழில்கள், விவசாயம் முதலியவற்றில் ஈடுபடுவார்கள். இதற்கு கிராம முன்னேற்றச் சங்கங்கள் உறுதுணையாக இருக்கவேண்டும், திரு. கே. பாலசுந்தரம், பண்டிதர் நா. இராசையா ஆகியோரும் பேசினர்.

## ரயில் விபத்தைத் தடுக்க மனநோய் வைத்தியம்

பம்பாய், ஏப்ரல் 16

ரயில்வேயில் நடைபெறும்விபத்துகளுக்கு மனித சக்தி காரணக் கூறாக இருத்தலாகாது என்பதற்காக, இனிமேல் புதிதாக வரும் எஞ்சின் டிரைவர்கள் மனநோய் மருத்துவ சோதனைக்கு ஆளாக்கப்படுவார்கள். இந்தமுறை ஜப்பான், பிரான்ஸ்ஆகிய நாடுகளில் வழக்கத்திலுள்ளது. இப்பரிசோதனையின் மூலம் டிரைவர்களின் மனநிலையும் மனத்திண்மையும் அறியப்படும். அதுமட்டுமல்லாது நேர்ந்த விபத்தோடு நேரடியான சம்பந்தம் கொண்டிருந்தவர்களும் இது போன்ற சோதனைக்கு ஆளாவார்கள். இதன் மூலம் விபத்து பற்றிய தெளிவான காரணம் அறியப்படும். விபத்துக்கு முன்னர் அவர்களின் மனநிலை எவ்வாறு இருந்தது என்பதும் தெரிந்துவிடும். குன்ஸ்ரூ கமிட்டியின அறிக்கை மீது மத்திய ரயில்வே அமைச்சரகம் செய்த பூர்வாங்க பரிந்துரைகளின் மீது ரயில்வே போர்டு மேற்கண்ட முடிவை எடுத்திருக்கிறது. இந்திய ரயில்வேக்களில் நடைபெறும் பெரும்பாலான விபத்துக்களுக்கு மனித சக்திகளே மூலகாரணமாக இருக்கின்றன என்று உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

## எதிரிகள் விடுதலை

### நீதிபதி எச்சரிக்கை

ஊர்காவற்றுறை, செவ்வாய்

பலாத்காரமாக வீட்டினுள் புகுந்து முகமது முத்து என்னும் பெண் மீது (வயது 38) பலாத்காரம் செய்ய முயன்றதாக, நயினதீவு நாலாம் வட்டார வசியான தம்பையா சதாசிவம் என்ற தொழிலாளி மீதும், பொலிஸ் கான்ஸ்டபிள்களான திரு. றுபெட், திரு. கருணையக்கா மீதும் குற்றம் சாட்டி ஊர்காவற்றுறை பொலிஸ் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குச் சென்ற வாரம் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின் பின் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

எதிரிகளை விடுதலை செய்யும்போது நீதிபதி பின்வருமாறு கூறினர்.

காக்கி உடைதரித்து விட்டால்எவர் வீட்டிலாவதுஅத்துமீறிப் பிரவேசிக்கலாம் என்ற எண்ணம் பொலிசாரிடம் இருக்கக் கூடாது. சம்பவம் நடந்த இரவு நீங்கள் எதிரியின் வீட்டினுள் புகுந்து இருக்கிறீர்கள் என்பதை நம்புகிறேன். ஆனல் வழக்காளியின் சாட்சியங்களில் பல முரண்பாடுகள் இருக்கின்றமையால் ஐ தீகங்களுக்குரிய சலாக்கியங்களை சட்ட முறைப்படி எதிரிகளாகிய நீங்கள் பெறுகின்றீர்கள். இவ்வழக்கில் முரண்பாடுகள் இல்லாது இருக்குமானல், ஆறு மாதச் சிறைத்தண்டனைக்கு அனுப்பத் தயங்கமாட்டேன்.

## ஆசியநாடுகளின் ஒற்றுமை

புதுடில்லி, ஏப். 16

"ஆசியநாடுகளிடையே ஒற்றுமையும், ஒத்துழைப்பும் இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்" என்று பாரதத்துக்கு விஜயம் செய்த தாய்லாந்து வெளியுறவு மந்திரி திரு. கோமான் கூறினர்.

வரவேற்பு வைபவமொன்றில் அவர் பேசுகையில், எமது சுதந்திரத்தை நாம் தான் பாதுகாக்கவேண்டும் என்றும் பாரதம் தனது சுதந்திரத்தை இழந்தால் எமது சுதந்திரமும் பறிபோய்விடுமென்றும் கூறினர்.

## நயினதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்



# விளம்பரம்

நயினதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிலுக்கென மீசுவரிநெல் வசூலிப்பதைச் சென்றஆண்டு முதல் நிறுத்தியுள்ளோம். யாராவது மீசுவரி நெல் வசூலிப்பதற்கென வந்தால் அவர்களிடம் ஒரு பொருளையும் கொடாதீர்கள். நேரடியாக ஆலயத்துக்கு கொண்டுவந்து கொடுத்து உலக முதல்வியாகிய அன்னையின் திருவருட் பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இங்ஙனம்
கா. ஆறுமுகம்
கௌரவ காரியதரிசி
தர்மபரிபாலனசபை.

ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்,
நயினதீவு 16-4-63

யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச் சங்கம், லிமிட்டெட்
4, கண்டி றோட், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
[ அரசாங்க பதிவு இலக்கம் எம். 110 ]

### விசேஷ அறிவித்தல்

சங்கத்திற்குச் செலுத்தவேண்டிய நன்கொடைப் பணம் மாதவிதம் செலுத்தப்படவேண்டும். தவறினுல் உடனடியாக நன்கொடை முற்பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஆகவே பாக்கிப் பணத்தை உடனடியாகச் செலுத்தவும். பொய்ப்பிரசாரங்களை நம்பி மோசமடையாமற் காரியாலயத்துக்கு வந்து விசாரிக்கவும்.

27-3-63முதல் 7-4-63 வரை காலகதியடைந்தோர்

| காலகதியடைந்தவர் இலக். | பெயர் | விலாசம் | திகதி |
| --- | --- | --- | --- |
| 2925 | சின்னவிகந்தர் | சந்தையடி தொல்புரம் | 27-3-63/28-12-62 |
| 689 அ | இன்னேசம் | 18, றெம்பிள்றோட்,யாழ். | 19-3-63/3-4-63 |
| 504 | வி. முத்து | மணற்குளம், உயிலங்குளம் | 7-4-63 |

சி. கந்தையா
காரியதரிசி

# கனடா புதியமந்திரிசபை

## வெள்ளியன்று பதவியேற்கும்

ஒட்டாவா, ஏப்ரல் 15

கனடா லிபரல் கட்சி அரசாங்கத்தின் புதிய மந்திரிசபை வெள்ளிக்கிழமை பதவியேற்குமென்றும் மந்திரிகள் தேர்வு நடைபெற்றுவிட்டதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் முன்னாள் பிரதமர் திரு. ஜோன் டிபன் பேக்கரும், புதிய பிரதமர் திரு. லிஸ்டர் பியர்ஸனும், அரசாங்க மாற்றம்பற்றி பேச்சுக்கள் நடத்தினர்கள் என்றும் இவர்களின் பேச்சுக்கள் இன்று தொடர்ந்து நடைபெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், முன்னாள் பிரதமர் திரு. ஜோன் டிபன் பேக்கரின் கட்சிக்கு 94 ஸ்தானங்களும், லிபரல் கட்சிக்கு 150 ஸ்தானங்களும் கிடைத்ததைத் தொடர்ந்து லிபரல் கட்சித் தலைவர் திரு. லிஸ்டர் பியர்ஸன் புதிய பிரதமரானர்.

பெரும்பான்மையான ஸ்தானங்களினல் திரு. டிபன் பேக்கரின் அரசாங்கத்தை லிபரல் கட்சி தோற்கடித்தபோதிலும் லிபரல் கட்சிக்கு பூரண ஆதரவு இல்லையென்று கூறப்படுகிறது. கனடாவின் புதிய பிரதமர் திரு. லிஸ்டர் பியர்ஸன் இந்த வாரத்தில் விசுவாசப் பிரமாணம் செய்துகொள்வார்.

புதிய பிரதமர் நிருபர்கள் மத்தியில் நேற்றுப் பேசுகையில், புதிய அரசாங்கத்தின் மந்திரிகள் தேர்வு நடைபெற்றுவிட்டதென்றும், எதிர்வரும் 19-ம் திகதி வெள்ளிக்கிழமை தமது மந்திரி சபை பதவியேற்குமென்றும் கூறினர்.

கனடா பாராளுமன்றத்தில் மொத்தம் 265 ஸ்தானங்கள் உண்டு.

---

# மின்சார பாட்டரி

## இருதயத்தை இயக்குவதற்கு!

லண்டன், ஏப். 14

பிரிட்டனில் 54 வயதான ஆசாமியின் இருதயத்தை சரியான முறையில் இயக்கவைக்க சிறிய மின்சார பாட்டரி பொருத்தப்பட்டுள்ளது. இந்த விதமான சிகிச்சைக்குப் பிறகு இப்போது அவர் வழக்கம் போல வேலைசெய்துவருகிறர்.

ஸ்காட்லந்தைச் சேர்ந்த இந்தஆசாமி இருதயகோளாறு காரணமாக கிளாஸ்கோ நகரில் உள்ள தெற்கு ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவரது இருதயம் சாதாரணமாக இருக்கவேண்டியதைவிட குறைவான அளவுக்கே துடிப்பதாக டாக்டர்கள் கண்டறிந்தனர். அதாவது அவரது இருதயத் துடிப்பு நிமிடத்திற்கு 40 தட்வைக்கும் குறைவாக இருந்தது. எனவே இவரது இருதயம் சரியான முறையில் துடிப்பதற்காக அவருக்கு மின்சார பாட்டரி பொருத்தப்பட்டது. இந்த மின்சார பாட்டரியானது இருதயத்துடிப்புக்குத் தேவையான மின்சார சக்தியை இருதயத்திற்கு அளித்துவருகிறது. இந்த மின்சார பாட்டரி 5 வருடங்களுக்குத் தொடர்ச்சியாக மின்சார சக்தியை அளிக்கவல்லது. இந்த மின்சார பாட்டரியைப் பொருத்திய பிறகு அவரது இருதயத் துடிப்பானது நிமிடத்திற்கு 60 தடவையாக அதிகரித்துள்ளது.

---

# விமானம் நொருங்கி

## 12 பேர் மரணம்

லண்டன், ஏப். 15

விக் வைக்கோன் விமானம் ஒன்று நொருங்கி வீழ்ந்ததால் ஐந்து விமானிகள் உட்பட 12 பேர் மரணமானர்கள். இந்த விமானம் குறிப்பிட்ட விமான நிலையத்தை வந்தடைவதற்கு 5 மைல் தூரத்திலேயே வீழ்ந்து நொருங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

# செயற்கை மலை

## சிறுவர்கள் ஏறிப்பழகுவதற்கு

லண்டன், ஏப். 14

மலையேறுவதில் பள்ளிச் சிறுவர்களுக்கு, பயிற்சி அளிப்பதற்காக பிரிட்டனில் கென்ட் என்னுமிடத்தில் செயற்கை மலை அமைக்கப்பட்டுள்ளது. கென்ட் கல்விக் கமிட்டியின் உடற்பயிற்சிக் கல்வி ஆலோசகரான ஆர்தர் ஹாப்கின்ஸ் இந்த செயற்கை மலையை அமைத்துள்ளார். இதுவரை 80 பள்ளிச் சிறுவர்களுக்கு இந்த செயற்கை மலையில் ஏறுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பெரிய மரக்கட்டைகளை ஒன்ரோடு ஒன்று இணைத்து அவற்றின் மீது மண்ணைப்பூசி இந்த செயற்கை மலையை ஆர்தர் ஹாட்கின்ஸ் உண்டாக்கியிருக்கிருர். இது பார்ப்பதற்கு மலைப் பாறைகளைக் கொண்ட மலை போல உள்ளது. பலவிதமான வடிவங்களைக் கொண்ட பாறைகளில் ஏறுவதற்கு பயிற்சி அளிப்பதற்காக வேண்டும்போதெல்லாம் இந்த மரக்கட்டைகளை கழற்றி பலவித முறைகளில் பொருத்துகிருர் ஆர்தர் ஹாப்கின்ஸ்.

---

# கார் விபத்தில்

## நூதன தீர்ப்பு!

நியூயோர்க், ஏப். 15

வீதியில் கார் வந்துகொண்டிருந்தபோது பாதசாரிகள் 4 பேர் திடீரென வீதியைக்கடக்க முயன்றதால் விபத்து ஏற்பட்டது. இதுசம்பந்தப்பட்ட வழக்கில் காரில்வந்துகொண்டிருந்தவரின் மனைவிக்கு 4 பாதசாரிகளும் நஷ்ட ஈடு அளிக்க வேண்டுமென கோர்ட் உத்தரவிட்டது. இந்த 4 பேரும் ரோட்டில் கார் வருவது கூடத்தெரியாமல் ரோட்டைக் கடக்க முயன்றபோது காரை ஓட்டி வந்த ஏ. கெயின் திடீரென பிரேக்போட்டு வண்டியை நிறுத்த வேண்டியதாயிற்று. இந்த அதிர்ச்சியில் காரில் உட்கார்ந்திருந்த திருமதி கெயினுக்கு காயங்கள் ஏற்பட்டன. திருமதி கெயினுக்கு இவ்விதமாக காயமேற்பட்டதால் அவருக்கு 4 பாதசாரிகளும் ரூ. 12 ஆயிரம் நஷ்டஈடு அளித்தாக வேண்டுமென இந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

# 'சீனர்கள் விரும்பினல் செல்லலாம்'

புதுடில்லி, ஏப். 16

சீனவுக்குச் செல்ல விரும்பும் சீனர்களை இங்கு வைத்திருக்க பாரதம் விரும்பாது என்று பாரத வெளிவிவகார அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பாரதத்திலிருந்து 908 சீனப் பிரஜைகள் தாயகத்துக்கு இரண்டு சீனக் கப்பல்கள் மூலம் சென்றனர். இது சம்பந்தமாக பாரத அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

"தாயகத்துக்குச் செல்ல விரும்பும் சீனப் பிரஜைகளை இங்கு வைத்திருக்க பாரதம் விரும்பாது. தாயகத்துக்குச் செல்ல விரும்பும் சீனர்கள் தடையின்றி அனுப்பப்படுவார்கள் சீனர்கள் எவரையும் இந்த பலவந்தமாக வைத்திருக்கவில்லை.

இரண்டு சீனக் கப்பல்களில் பாரதத்திலுள்ள சீனப் பிரஜைகளை அவர்களது தாயகத்துக்கு அனுப்புவதில் ஏற்பட்ட தாமதத்துக்கு பாரதம் பொறுப்பல்ல."

---

# திருடர்களைப் பிடிக்கும் டெலிவிஷன்

லண்டன், ஏப். 12

நார்த்தாம்டனைச் சேர்ந்தபெரிய தானியங்கிகடைகளில் (சூபர் மார்க்கெட்) திருடர்களைப் பிடிப்பதற்கு டெலிவிஷன் காமராககளைப் பயன்படுத்துகின்றனர். இந்தக்கடைகளில் வாடிக்கைக்காரர்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களைத் தாங்களே எடுத்துக்கொண்டு அவற்றுக்குரிய பணத்தைக் கொடுப்பார்கள். இங்கு சாமான்களைக் கள்ளத்தனமாகப் பைக்குள் எடுத்துவைத்துக் கொண்டு பணம் கொடாமல் செல்லும் திருடர்களைப் பிடிக்க, மறைவான இடங்களில் ஊடுருவிப் படம் பிடிக்கும் டெலிவிஷன் காமராக்களைப் பயன்படுத்துகின்றனர். பன்னிரண்டடி உயரமுள்ள திரைகளில் டெலிவிஷன் காமராபிடிக்கும் படங்கள் தெரியும். இதன் மூலம் வாடிக்கைக்காரர்களே திருடர்களைக் காணமுடியும். டெலிவிஷன் வைத்த பிறகு இக்கடைகளில் திருட்டு மிகவும் குறைந்துபோய்விட்டது.

---

# விஞ்ஞான மாணவர் கூட்டம்

லண்டன், ஏப்ரல் 15

முப்பத்தைந்து நாடுகளைச் சேர்ந்த 500 விஞ்ஞான மாணவர்கள் இங்கு இவ்வாண்டு கோடையில் நடைபெறும் சர்வதேச இளம் விஞ்ஞானிகள்விழாவில் கலந்துகொள்ள வருகின்றனர். இவர்களுக்கான போக்குவரத்துச் செலவுகளை, அவர்களுடைய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானக் கழகங்கள் ஏற்கும்.

---

# மீன் பெட்டிக்குள் ஆயுதங்கள்!

டாக்கா, ஏப்ரல் 14

சுதந்திரம்பெற்ற ஆபிரிக்க நாடுகளுக்குள் கம்யூனிஸ ஆயுதங்கள் பெருவாரியாகக் கள்ளத்தனமான முறையில் அனுப்பப்படுவதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விசாரணைகளின் மூலம் தெரியவருகிறது.

"சார்டைன் மீன்கள்" என்று எழுதப்சட்டிருந்த பெட்டிகளுக்குள், இராணுவ ஆயுதங்கள் இருந்ததை, கினி குடியரசின் தலைநகரான கோனக்ரியில் பொலிசார் கண்டுபிடித்தனர்.

போர்த்துக்கேசிய கினி நாட்டின் ஆபிரிக்க விடுதலைக் கட்சியின் உறுப்பினர்களுக்கு அந்த ஆயுதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. இந்தக் கட்சிக்கு கினி குடியரசு பாதுகாப்புத் தந்துளளது. கம்யூனிஸ ஆதரவு கொண்டதும் 1956 நவம்பரில் மாஸ்கோவில் 82 கட்சிகள் கூடிச் செய்துகொண்ட தீர்மானத்தின்படி மார்க்ஸீய லெனினீய சித்தாந்தங்களில் நம்பிக்கை கொண்டதுமான ஆபிரிக்க விடுதலைக் கட்சியின் கிளை மேற்படி கினி நாட்டுக் கட்சி. இந்தக் கட்சிக்கு மீன் என்ற பெயரில் மூன்று வாரத்தில் மட்டும் 3 கப்பல்களில் பெட்டிகள் வந்து இறங்கின. கினி தலைநகரான கோனக்ரிக்கு வடக்கேயுள்ள போக் என்னும் இடத்துக்கு 'மீன்' பெட்டிகள் வந்திறங்கியதும், பொலிசார் மேற்படி கட்சியின் தலைமை அலுவலகத்தில் திடீரெனப் புகுந்தனர்.

---

எல்லைத் தகராறு:

# 'பேச்சுக்கள் நடத்த சீனதான் விரும்பவில்லை'

## சீனமீது பாரத கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

### "அவதூறு பிரசாரம் விரும்பத்தக்கதல்ல"

புதுடில்லி, ஏப்ரல் 16

"பாரத—சீன எல்லைத் தகராற்றை சுமுகமாகத் தீர்த்துவைக்கும் பொருட்டு பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு சீனதான் முட்டுக்கட்டையாகவிருக்கிறது. எல்லையில் அமைதியை நிலவச் செய்ய, எல்லைத் தகராற்றைத் தீர்த்துவைக்க சீனதான் விரும்பவில்லை."

அண்மையில் கூடிய பாரத கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாகக் கமிட்டி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

பாரத-சீன எல்லைத் தகராறு சம்பந்தமாக கமிட்டி மேலும் தெரிவித்ததாவது: "எல்லையில் விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெறுவதற்கு சீனதான் காரணமாகும். எல்லைத் தகராற்றை பேச்சுவார்த்தைகள் மூலம் சுமுகமாகத் தீர்த்துவைக்கலாம் ஆனல் சீன இதை விரும்புகிறதில்லை.

**'யோசனைகளை நிராகரித்தது'**

எல்லைத் தகராற்றைத் தீர்த்துவைக்கும் பொருட்டு நேச நாடுகள் யோசனைகள் கூறியிருந்தன. ஆனல், நேச நாடுகளின் யோசனைகளை ஏற்றுக்கொள்ள சீன மறுத்துவிட்டது. அந்த யோசனைகளையே சீன நிராகரித்துவிட்டது.

**அவதூறு பிரசாரங்கள்**

பாரதத்துக்கு எதிராக சீன அவதூருன பிரசாரங்களைச் செய்துவருவது விரும்பத்தக்கதல்ல. இப்படியான பிரசார வேலைகளில் சீன ஈடுபட்டிருப்பது குறித்து நாம் சீனவைக் கண்டிக்கின்ருேம்.

**பயமுறுத்தலினல் கிடைக்கும் பலன்**

பாரதத்தை சீன பயமுறுத்திவருகிறது. சீனவின் பயமுறுத்தல்களினல், பாரதத்துக்குத்தான் அதிக பலன் கிடைச்கிறது. பயமுறுத்தல்கள் காரணமாக, மேற்கு நாடுகளிடமிருந்து பாரதம் ஆயுத உதவிகளைப்பெற வாய்ப்புக் கிடைக்கிறது."

தங்கக் கட்டுப்பாடு சம்பந்தமாகவும் கமிட்டி ஆலோசனை செய்தது. புதிய தங்கக் கட்டுப்பாட்டினல், பலருக்கும் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கிறதென்றும் ஆனல் கஷ்டங்கள் தோன்ருவகையில், தங்கக் கட்டுப்பாட்டு அமுலாக்கப்படவேண்டும் என்றும் கமிட்டி தீர்மானித்தது. கட்டாய சேமிப்புத் திட்டத்தினல் ஏழைகள் பாதிக்கப்படுவார்கள் என்றும் கட்டாய சேமிப்புத் திட்டத்தை விலக்கவேண்டும் என்று கோரும் தீர்மானமும் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டது.

---

# 'கடலோரப் பகுதிகளில் எஃகு ஆலைகள்'

புதுடில்லி, ஏப். 16

"தனியார்துறையும் அரசாங்கத்துறையும் சேர்ந்துஈடுபடுவதால் எஃகு உற்பத்தியில் நல்ல பலன்கள் கிடைத்திருக்கின்றன" என்று எஃகு கனரகமந்திரி திரு. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எஃகு உற்பத்தியை அதிகரிக்கும்பொருட்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடும் முகமாக மந்திரி திரு. சுப்பிரமணியம் நாளை புதன்கிழமை புதுடில்லியிலிருந்து ஆஸ்திரியா, மேற்கு ஜெர்மனி ஆகிய இடங்களுக்குப் பயணமாவார். மேற்கு ஜெர்மனியில் அவர் கடனுதவி பெறும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார்.

நாட்டின் எஃகு உற்பத்தி குறித்து திரு. சுப்பிரமணியம் தெரிவித்ததாவது:

"நாட்டின் எஃகு உற்பத்தி இப்பொழுது அதிகரித்து இருக்கிறது. எஃகு உற்பத்தியில் அரசாங்கதுறையும் தனியார்துறையும் ஈடுபடுவதால் எஃகு உற்பத்தி அதிகரித்து வருகிறது.

எதிர்காலத்தில் எஃகு ஆலைகள் கடலோரப் பகுதிகளில் தான் அமைக்கப்படும். கடலோரப்பகுதிகளில் எஃகு ஆலைகள் அமைக்கப்படுவதால் போக்குவரத்து சுலபமாகவிருக்கிறது.

---

# பள்ளிகளில் புகை எதிர்ப்பு

நியூயோர்க், ஏப். 16

புகை பிடிக்கும் பழக்கத்துக்கு எதிராக பள்ளிகளிலும், வீடுகளிலும் தீவிரமான இயக்கத்தை ஆரம்பிக்க கலிபோர்னியா வைத்திய சங்கம் முடிவு செய்துள்ளது. சிகரெட்பிடிப்பதால் உடலுக்கு ஏற்படக்கூடிய தீங்குகள் பற்றி சிறந்த முறையில் எடுத்துக்கூறி பிரசாரம் செய்வதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும். நாடு முழுவதிலும் இந்த இயக்கம் மேற்கொள்ளப்படும்.

---

# மீன்பிடி உரிமை

லண்டன், ஏப். 16

பிரிட்டனைச் சேர்ந்த, சசெக்சில் இருக்கும் சீஃபார்டு வளைகுடாவில் பெல்ஜிய நாட்டவர் மீன்பிடிக்க உரிமை உண்டு என்று விக்டர் தெபேயெப் வாதாடுகிருர். இதற்கு ஆதாரம் இரண்டாம் சார்லஸ் மன்னன் 1666-ல் அளித்த சாசன உரிமை என்று பேயெப் கூறுகிருர். முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் அளித்த அந்த உரிமை இனிமேலும் செல்லுபடியாகாது என்று பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவிக்கிறது. ஆனல் அந்த உரிமையை நிலைநாட்ட இந்தக் கோடைகாலத்தில் பேயெப் பிரிட்டனைச் சேர்ந்த கடற்பகுதியில் மீன்பிடிப்பார். தனது ஊரைச் சேர்ந்த 50 பேருக்கு அவர் மேற்படி பகுதியில் மீன்பிடிக்கும் உரிமைகளை வழங்கியிருக்கிருர். நிலப்பரப்பிலிருந்து மூன்று மைல் தூரத்தில் கடலில் மீன் பிடிப்பது குற்றமாகும். மீறிப்பிடிப்பவர்களைக் கப்பற்படை மீன் துறையினர் சிறைப்படுத்துவார்கள். பின்னர் சுமார் ரூ. 3500 அபராதமும் விதிக்கப்படும்.

## மணி வாக்கு

பெண்களைப் பராசக்தியின் வடிவங்களாகப் பார்ப்பதாயின் பெண்ணே ஆடவனுக்கு விடுதலை அளிக்கின்ருள். ஆத்மீக நோக்கம் கொண்டவர் பெண்ணையும் பொன்னையும் பகிஷ்கரிக்கத் தேவையில்லை. ஆனல் அவை குறித்த தம் மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டும்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
EELANADU. National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை மீ 4 உ (17-4-63)

## மேயர் பதவி

யாழ்ப்பாண மாநகர சபைக்குப் புதிய மேயராகத் தெரிவு செய்யப்பட்டவர்மீது பதவிநீக்கத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது. காரணம் தெரியாததால் குறிப்பிட்ட இப்பிரேரணை பற்றி நாம் எதுவும் கூற விரும்பவில்லை.

ஆனல் பொதுவாக மேயர் பதவி வகிப்பவர் மாநகரசபை மட்டுமன்றி, நகரின் மதிப்பையும் கௌரவத்தையும் காக்க வேண்டியராவார். அப்பேர்ப்பட்ட பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள்மீது அடிக்கடி பதவிநீக்கத் தீர்மானங்கள் கொண்டு வருவது அப்பதவியின் மதிப்பை மட்டுமன்றி, நகரின் கௌரவத்தையும் பாதிப்பதாக இருக்கும்.

ஒருமுறை மேயராகத்தெரிவு செய்யப்படுபவர்மீது பதவிநீக்கத் தீர்மானம் நிறைவேற வேண்டுமாயின் சபை மொத்த மெம்பர்களில் மூன்றில்இரு பங்கினரது வாக்குபலம் வேண்டுமென்று முன்னர் சட்டமிருந்தது. ஆனல் அந்த விதியை பின்னர் ஒரு வாக்கு அதிகப்படியாக இருந்தாலும் மேயர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறிவிட்டதாகக் கருதலாமென்று திருத்திவிட்டார்கள். ஆகவே மேயர் பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவரின் நிலை மேலும் ஸ்திரமற்று, எச்சமயமும் நீக்கப்படக் கூடியதாகிவிட்டது.

தமது பதவியை துஷ்பிரயோகம் செய்து, நிர்வாகத்தை ஒழுங்கீனமாக நடத்துவதாயின் அப்பேர்ப்பட்டவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு அவரை நீக்க சபைக்கு எச்சமயமும் அதிகாரம் இருக்க வேண்டியது அவசியம்தான். பொதுஜன நன்மையைப் பாதுகாக்க சபைக்குப் போதிய அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனல் தனிப்பட்ட சொந்தக் காரணங்களுக்காகவோ கட்சிக் காரணங்களுக்காகவோ, மேயர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதாயின், அது எவ்வகையிலும் விரும்பத் தக்கதாகாது. நகரின் மானமும் மதிப்பும் மேயர் பதவியில் பெரிதும் தங்கியுள்ளது. அதைக் கூடுமானவரை பாதுகாக்க வேண்டியது சபையிலுள்ள ஒவ்வொரு மெம்பர் மட்டுமன்றி, நகரமக்கள் ஒவ்வொருவரது கடமையுமாகும்.

நாம் ஏற்கெனவே இப்பத்திகளில் குறிப்பிட்டதுபோல், மேயர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவர், நகரின் முடிசூடாமன்னராவர். அப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதும், அவர் கட்சி முதலிய கட்டுகளிலிருந்து தம்மை நீக்கிக் கொண்டு எல்லாருக்கும் பொதுவானவராக இருந்தால்தான், அவர் தம் மதிப்பைக் காத்துக் கொள்வதுடன், பலரது ஒத்துழைப்பையும் பெற்று தமது கடமைகளையும் சீராகச் செய்ய முடியும். இதற்கான முறையில் இவ்வித மேலான சம்பிரதாயம் ஏற்படுவது பல விதங்களிலும் உதவியாக இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, நாட்டிலே பல நகரங்களிலும் மேயர் பதவிக்கு அதிக போட்டிகள் ஏற்படுவதும் மேயர் தேர்தலில் பல ஊழல்கள் வருவதும் பின்னர் நம்பிக்கையில்லாத் தீர்மானங் கொண்டுவரப்படுவதும் சர்வசகஜமாகிவிட்டது. ஜனநாயகத்தில் இதை அடியோடு தடுக்க முடியாதுதான் என்ருலும் மேயர் பதவியின் கண்ணியத்தைப் பாதுகாக்கவும், அப்பதவி சீராக பலருக்கும் கிடைக்க முடியும்படி செய்யவும் சபையிலுள்ள எல்லா மெம்பர்களும் பொது நன்மையை உள்ளிட்டு இதுபற்றி ஒரு சம்பிரதாயத்தை ஏற்படுத்திக் கொள்வது பல விதங்களிலும் நல்லதாகும்.

சென்னையிலே இது பற்றி வகுப்புவாரியாக ஓர் ஏற்பாடு செய்து கொண்டு முப்பது ஆண்டுகளுக்கு மேல் அதைப் பின்பற்றிவருகின்றனர். இங்கும் ஒவ்வொரு வட்டாரத்து மெம்பரும் முறையே ஒருவருஷம் அடுத்தடுத்து மேயர் பதவி வகிக்கும்படி தங்களுக்குள்ளாக மெம்பர்கள் ஏதாவது ஒரு நிரந்தர ஏற்பாடு செய்து கொண்டால் இதுபற்றிய சிக்கல்கள் பெரிதும் குறையக்கூடும். மேயராகத் தெரிவு செய்யப்படுபவர் பலரது ஒத்துழைப்பையும் பெற்று தமது கடமைகளைக் கூடுமானவரை நிம்மதியாகச் செய்வதுடன் நகரிலுள்ள ஒவ்வொரு வட்டாரத்து மக்களுக்கும் இந்த ஒழுங்கு திருப்தி அளிக்கவும் கூடும். எப்படியும் நகரின் நற்பெயரையும் நன்மையையும் முன்னிட்டு மாநகர சபையிலுள்ள எல்லா மெம்பர்களும் இவ்விஷயத்தில் ஒத்துழைத்து ஓர் ஒழுங்கு செய்து கொள்வது பலவிதங்களிலும் அவசியமாவதுடன் மற்றஸ்தல ஸ்தாபனங்களுக்கும் இது பற்றி மேலான முன்மாதிரியாக யாழ்ப்பாணம் விளங்குவதாகவுமிருக்கும்

## பழமரங்களைப் பாதுகாக்க காற்ருடிகள்

நியூயார்க், ஏப். 15

அமெரிக்காவில் பிளாரிடா பகுதியில் உள்ள பழமரங்களும் காய்கறிகளும் குளிர் காற்றினல் பாதிக்கப்படாதபடி தடுக்க பிளாரிடா சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் ஹேரால்புருக்லேண்டர்ஸ் நூதன யோசனையைக் கூறியுள்ளார். பிளாரிடா பகுதியில் வரிசையாக 60 அடி உயரமுள்ள தூபிகளை அமைத்து அவற்றின்மீது 12 அடி அகலமுள்ள தகடுகளைக் கொண்ட ராட்சத மின்சார காற்ருடிகளை இரட்டை வரிசையில்அமைக்க வேண்டும் என்பதே இவரது யோசனையாகும். இந்த ராட்சத மின்சார காற்ருடிகள் வடக்குப் பகுதியிலிருந்து வீசும் கடும் குளிர் காற்றைத் தடுத்துவிடும் என்று லேண்டர்ஸ் கூறுகிருர். விவசாயத் துறைக்கான வானிலை ஆராய்ச்சி மகாநாட்டில் பேசுகையில் இவ்வாறு கூறினர். அவர் கூறுவது போல மின்சாரக் காற்ருடிகளை அமைக்க ரூ. 13 கோடி செலவாகும். ஆனலும்கூட இது இலாபகரமாக இருக்குமாம். ஏனெனில் 1957—58-ம் ஆண்டில் மட்டும் கடும் குளிர்காற்ருல் பிளாரிடா பகுதியில் பழங்களும் காய்கறிகளும் நாசமடைந்து ரூ. 69 கோடிக்கு நஷ்டம் ஏற்பட்டது.

## இந்திய சாக்குகள் ஏற்றுமதி

கல்கத்தா, ஏப். 14

இவ்வாண்டு ஜனவரியில் 44,200 தொன் இந்தியச்சாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஜூலை 62 ஜனவரி 63 கால கட்டத்தின் ஏற்றுமதி மொத்தம் 346,500 தொன் ஆகிறது. சென்ற ஆண்டில் இதே கால கட்டத்தில் 261 400 தொன் சாக்குத்தான் ஏற்றுமதியாகியது. இந்தியாவிடமிருந்து அமெரிக்கா, கனடா, அர்ஜென்டீன ஆகிய நாடுகள் ஏராளமான அளவில் சாக்கு இறக்குமதி செய்கின்றன.

ஐரோப்பாவில்பிரிட்டன்தான் பெருமளவில் சாக்கு வாங்குகிறது. ஆபிரிக்காவுக்கும்,மத்தியதூரகிழக்கு நாடுகளுக்கும் இந்தியச் சாக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய இடங்களுக்கும் பெருமளவில் சாக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## மலேசியா கூட்டரசு

நியுயோர்க், ஏப். 16

மலேசியா கூட்டரசு அமைக்கப்படுவதை ஐ. நா தடுக்க முடியாதென்று ஐ.நா. உதவிக்காரியதரிசி திரு.வி. வி. நரசிம்மன் தெரிவித்துள்ளார்.

மலேசியா கூட்டரசு அமைக்கப்படுவது, சம்பந்தப்பட்ட நாடுகளின் முயற்சி என்றும் இதில் ஐ. நா. தலையிடவோ அல்லது தடையாக நிற்கவோ முடியாதென்றும் திரு. நரசிம்மன் கூறினர்.

மலேசியா கூட்டரசில் சேர்ந்துள்ள நாடுகளுக்கு திரு. நரசிம்மன் இப்பொழுது விஜயம் செய்து வருகிருர்'

## வெளிநாட்டில் இந்தியர் செலவு

கல்கத்தா ஏப்.14

வெளிநாடுகளில் பயணம் செய்யும் இந்தியர்கள், அந் நாடுகளில் 1960-61 - ம் ஆண்டில் செலவு செய்த தொகை ரூ. 12 கோடிக்குப் பக்கமிருக்கும் என்று ரிசர்வ் வங்கி அறிவிக்கிறது. பலவேறு விதமான கட்டுப்பாடுகள் இருந்தும் செலவு தொகை உயர்வதாக வங்கி அறிவிக்கிறது.

பெரிய அளவில் ரூபாய் 12.4 கோடியாக இருந்த செலவு தொகை 1956-57ல் ரூ. 7.8 கோடியாகக் குறைந்தது. இருந்தும் தற்போது ஏராளமான மாணவர்கள் வெளிநாடுகள் செல்வதால் செலவு தொகை உயர்ந்து கொண்டே செல்கிறது. மாணவர்கள், வணிகர்கள் உல்லாசப் பயணிகள் ஆகியோர் வெளிநாடு செல்வது தற்போது தடை செய்யப்பட்டிருக்கிறது.

## தவருன செய்தி

கொழும்பு. செவ்வாய்

நீதி அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு அசோகா கருணரத்னவை அப்பதவியிலிருந்து விலக்குமாறு பிரதமர், கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூறியதாக சிங்களப்பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி உண்மையற்றதென கவர்னர் ஜெனரல், திரு. கருணரத்னவிற்கு தெரிவித்துள்ளார். சிங்களப்பத்திரிகையில் வெளியான செய்தி பற்றி கவர்னர் ஜெனரலிடமிருந்து திரு. கருணரத்ன விளக்கம் கோரியிருந்தார்.

## மந்திரிசபை மாற்றம்

### அனுமதியை அடெளலா பெற்றுவிட்டார்

லியப்போல்ட்வில்லி, ஏப். 16

காங்கோ பிரதமர் திரு. அடெளலா தனது மந்திரி சபையை மாற்றியமைப்பதற்கான அனுமதியைப் பெற்றுவிட்டார். மந்திரி சபையை மாற்றியமைப்பதற்கான அனுமதியை ஜனதிபதி கஸவுபு வழங்கினர்.

காங்கோ பிரதமர் திரு. அடெளலாவின் புதிய மந்திரிகள், விசுவாசப் பிரமாணம் செய்துகொண்ட பின்னர் மந்திரிகள் விபரம் வெளியிடப்படும்.

1961-ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம் பிரதமராக திரு. அடெளலா பதவியேற்ற பின்னர், மூன்று மந்திரிசபைகள் அமைக்கப்பெற்றன. நான்காவது மந்திரி சபை விரைவில் அமைக்கப்படும்.

கொலை செய்யப்பட்ட திரு. லுமும்பாவை தலைவராகக் கொண்ட தேசியக் கட்சிக்கு திரு. அடெளலா ஆதரவளிப்பார் என்று கூறப்படுகிறது.

## சுழிபுரத்தில் எல்லாம் தமிழியக்கம்

சுழிபுரம், செவ்.

சுழிபுரம் பெரிய தபாற் கந்தோர் முன்னிலையில் எல்லாம் தமிழ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்துக்குத் தமிழில் தந்தி அனுப்பும் வேலையுடன் ஆரம்பமானது. முதல் தந்தியை திரு. அ. அமிர்தலிங்கம் அனுப்பிவைத்தார். திரு. க. பொ. இரத்தினம், திரு. அ. தையல்பாகர், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் தபால் நிலையத்துக்கு வந்தவர்களிடம் எல்லாம தமிழிலேயே தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொண்டனர். இயக்கம் மிகவும் அமைதியாக நடைபெற்றது.

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்திலே ஓர் அரசாங்கக் கந்தோரில் ஊழியராக்க் கடமை பார்க்கும் ஓர் அன்பர் தமது குடும்ப வரவு செலவு திட்டத்தைப்பற்றி ஓர் ருசியான கடிதம் எழுதியுள்ளார். மூன்று வருடங்களுக்கு முன்பதாகத்தான் அவர் கல்யாணம் கட்டிஞராம். ஆசைக்கு ஒரு ஆணும், அருமைக்கு ஒரு பெண்ணும் உண்டு.

'எனது மனைவி சிக்கனமாகச் செலவு செய்பவள். ஆடம்பரத்தை வெறுப்பவள். பொறுமையுள்ளவள். பழைய காலப் பெண. பக்தியுள்ளவள்.அப்படியிருந்தும், மாசத்தில் வரவைவிட செலவு ரூ. 21-75 சதம் ஆகிறது" என்று கூறி செலவு விவரங்களைத் தருகின்ருர்

* * *

காலைச் சாப்பாடு ரூ. 15, கூப்பன் அரிசி ரூ. 11-40, பல சரக்குச் சாமான், நல்லெண்ணெய் ரூ. 10, தேங்காய் ரூ. 12, சீனி ரூ. 5-25, காய்கறி 22-50, வீட்டு வாடகை ரூ. 20, சலவைச் செலவு ரூ. 5, பால் ரூ 7-50, உடுபிடவை ரூ. 15, தேநீர்க் கடைக்கு ரூ.10, இடையில் இறைச்சி ரூ. 12-50.

"ஆக மொத்தச் செலவு ரூ. 149-15. மாதச் சம்பளம் ரூ. 127-40 தான். ஆகவே மாதா மாதம் கடன் ரூ. 21-75 சதம் ஏறுகிறது. நான் குடிப்பவனுக, புகைப்பவனுக இருந்தால்குடும்பம்குட்டிச்சுவர் தான் மனைவி நல்லவளாக இருப்பதால்தான் குடும்பம் ஓரளவு நிம்மதியாக இருக்கின்றது. இவ்விரு பிள்ளைகளும்போதும், இனி வேண்டாம் என்று முடிவு கட்டிவிட்டோம். இன்னும் பிள்ளைகள் கூடிக்கொண்டு போனல் நிலைமை என்ன ஆகும்? என் அனுபவத்திலே கல்யாணம் கட்டாமல் மைனராக இருப்பதே இக்காலத்தில் நன்று" என்று குறிப்பிட்டுள்ளார். பாவம்!

* * *

இதேபோல் நம்மில் எவ்வளவோ பேர் இருக்கின்ருேம். கல்யாணம் கட்டுவதற்குமுன், இதைப்பற்றி யோசிப்பதில்லை. கட்டிய பிற்பாடு, குடும்பமும் வளர்ந்தபின், ஏன் கட்டினேம் என்று வருந்துகின்ருேம். என்ன செய்வது?

ஆனல் அந்த அன்பர் ஒரு விதத்தில் அதிர்ஷ்டசாலி. நல்ல மனைவி கிடைத்திருக்கிருள். கல்யாணமான மூன்றே வருஷத்துக்குள்ளாக குழந்தைகளுக்கு "புல்ஸ்டாப்" போட்டுவிட்டார்! குடி, புகைத்தல் முதலிய செலவுக்கான பழக்கங்களுமில்லை..

ரஷ்யா முதலிய மேலை நாடுகளில் குழந்தைகளுக்கான பொறுப்பை அரசாங்கம் வெகுவாக ஏற்கின்றதாம். ஆனல் இங்கோ எல்லாப் பளுவும் பெற்ருேர் தலையில்தான்.

* * *

படிக்கிருேம். படித்தபின் வேலையில்லையே என்று கவலை. வேலை கிடைத்தபின் கல்யாணம். அதன்பின் பிள்ளை இல்லையே என்று விசாரம். பிள்ளைகள் பிறந்தபின், வருமானம் போதவில்லையே என்று ஏக்கம். இடையிலே வியாதி முதலியன ஏற்பட்டால் அதனல் அதிகப்படி தொந்தரவும் செலவும்.

என்ருலும் விவாகங்கள் நிற்கவில்லை. இந்நிலையில் விவாகம் கட்டுபவர் வீரர்கள்தானே! எவ்வளவு கஷ்டம் வரினும் அதையெல்லாம் பொறுமையுடன் சமாளித்து எப்படியோ குடும்பத்தை நம்மில் பலரும் கொண்டுபோகிருேம். நல்ல காலம்வரும் என்ற நம்பிக்கை. நம்மைவிட குறைந்த வருமானத்தில் பெரிய குடும்பப் பொறுப்பைச் சுமப்பவர் பலர். அவர்களைப் பார்த்துத்தான் நாம் ஆறுதல் அடையவேண்டும்.

எளிய குடும்பங்கள் சிலவற்றில் குழந்தைகள் தலையெ

(5ம் பக்கம் பார்க்க)

# “சோஷலிஸ அரசாங்கம் நிறுவ ஐக்கியமுன்னணியால் முடியும்”

## இடதுசாரிக்கட்சிக் கூட்டத்தில் என். எம்.

### ‘அரசாங்க அங்கத்தினர்கள் தங்கள் பிரச்னையை தீர்த்துவிட்டனர்’ —பிலிப்

மீரிகாமம், செவ்வாய்

“திட்டமிடப்படாத கொள்கைகளையுடைய, நாட்டுக்கு சேவையெதுவும் செய்யாத அரசாங்கம், அலிபாபாவும் 40 திருடர்களுக்கும்சமமானது” என்று மகந்துறை, சண்டலங்காவில் நடைபெற்ற இடதுசாரி கட்சிகளின் கூட்டதில் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் கூறினர்.

**ஒற்றுமை குலையாது**

டாக்டர் என். எம். பெரேரா தொடர்ந்து பேசுகையில், இடதுசாரிக் கட்சிகளிடையே ஏற்பட்டிருக்கும் ஒற்றுமை தற்காலிகமானது, விரைவில் குறைந்துவிடுமென்று சிலர் கூறுகிறார்களென்றும் இது நம்ப முடியாதென்றும் நாட்டுக்கேற்ற உண்மையான ஒரு சோஷலிஸ அரசாங்கத்தை நிறுவ இடதுசாரி கட்சிகளினல் முடியுமென்றும் கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது: ‘அமெரிக்காவின் உதவி நிறுத்ததப்பட்ட காரணத்துக்காக இடதுசாரி ஐக்கிய முன்னணி உருவாகவில்லை. ஏழை மக்களின் விவசாயிகளின் நலன்களை, கவனிப்பதற்காக ஒரு சோஷலிஸ அரசாங்கத்தை இலங்கையில் நிறுவும் முகமாகவே ஐக்கிய முன்னணி உருவானது.

**பிரச்னைகளை தீர்க்கவில்லை**

ஐக்கிய தேசியக்கட்சி இந்த நாட்டை ஒன்பது வருட காலங்களுக்கு ஆட்சி புரிந்திருக்கிறது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆறரை வருடங்களாக இலங்கையைஆண்டுவருகிறது. ஆனல் இரண்டினலும் இந்த நாட்டுப் பிரச்னைகளைத் தீர்க்க முடியவில்லை. பொருளாதார தரத்தை உயர்த்தி, இந்த நாட்டு மக்களை சந்தோஷமாக வைத்திருக்க இந்த இரண்டு அரசாங்கங்களினலும் முடியவில்லை.

**‘கல்வியறிவு இல்லாதவர்கள்**

நாட்டைக் காப்பாற்றுவதற்கு ஆட்சியைப் பொறுப்பேற்பதற்கு திட்டமிடப்பட்ட கொள்கைகளை உடைய ஒரு ஐக்கிய முன்னணி அவசியம் தேவை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அரசியல் வாதிகள் கல்வி அறிவு இல்லாதவர்கள். நாட்டின பிரச்னைகளைத் தீர்க்க முயற்சிக்கும் சமயத்தில் தோல்வி காண்கிறனர்.

**‘சொந்தப் பிரச்னைகள் தீர்க்கப்பட்டன’**

அவிசாவளை எம். பி திரு. பிலிப் குணவர்த்தன பேசுகையில், நாட்டை எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகளையும் தீர்க்க இந்த அரசாங்கத்தினல் முடியாவிட்டாலும், இந்த அரசாங்கத்தின் அங்கத்தினர்கள் பலர் தங்களது சொந்தப் பிரச்னைகளைத் தீர்த்துவிட்டனர் என்று கூறினர்.

**“அமெரிக்காவின் விழுங்கும முயற்சி”**

கொழும்பு மத்தி இரண்டாவது எம். பி. திரு. பீட்டர் கெனமன் பேசுகையில், சிறிய நாடுகளை விழுங்க அமெரிக்கா முயற்சிக்கிறதென்றும் சோஷலிஸ நாடுகளிடமிருந்து உதவிகள் எதையும் பெறுவதற்கு மறுக்கும் சில மந்திரிகள், அமெரிகக உதவியைப் பெற முயற்சிக்கிறார்கள் என்றும் கூறினர்.

## ஐ. நா.வில் சீன இடம்பெறுமா?

நியூயோர்க், ஏப். 16

சீனவை ஐக்கிய நாடுகள் சபையில் அனுமதிப்பதற்கான வாய்ப்புகள் இந்த ஆண்டில் சாதகமான நிலையில் இல்லை என்று ஐ. நா. சபையைச் சேர்ந்த உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஓரளவு திருப்திகரம் இறுதியில் ஏற்படும் என்று வாஷிங்டனிலுள்ள ஐ. நா. சபைத் தகவல் நிலைய இயக்குநரான பிலிப் டீன் தெரிவித்தார்.

தற்போது நடந்து வரும் படைப்பலக் குறைப்புப் பேச்சு வார்த்தைகளில் சீன கலந்து கொள்ளாதவரையில் உருவான முடிவுகள் ஏற்படாது என்றும் கருத்தின் அடிப்படையில் அவர் மேற்கண்டவாறு கூறினர்.

கியூபாவுக்குச் சீன உதவுவதுபற்றி டீன் கூறுகையில் இது “குருடன் செவிடனுக்கும் ஊமையனுக்கும்வழிகாட்டுவது பாலாகும்” என்று குறிப்பிட்டார்.

வல்லரசுகள் ஒன்றோடொன்று மோதி உலகப் போர் மூளாமல் பார்த்துக் கொள்வதே ஐ நா. சபையின் அடிப்படைப் பணியாகும். அத்துடன் மட்டும் அதன் பணி நின்றுவிடவில்லை‘ வளர்ச்சியடையாத நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதும் ஐ. நா. சபையின் முக்கியப் பணியாகும்.

பால்டிமோரில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் டீன் மேற்கண்டவாறு தெரிவித்தார். சீன இந்தியாவைத் தாக்கியது குறித்து அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

## ‘கதர் ஆடை தயாரிக்கவேண்டும்’

### கிளிநொச்சி எம். பி. யோசனை

கிளிநொச்சி, செவ்வாய்

‘காந்தி அடிகளுடைய வாழ்க்கை நெறிகளையும் போதனைகளையும் பின்பற்றி வாழ்ந்தால்தான் இனிமேல் இலங்கை மக்கள் வாழலாம். கையால் நூல்நூற்று கதர் உடைகளை நாம் தயாரித்துக் கொள்ளவேண்டும். சுயமுயற்சியினல் நமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும்’ என்று கிளிநொச்சி எம். பி திரு. ஏ. சிவசுந்தரம் உருத்திரபுரம் சந்தை மண்டபத்தில் நடைபெற்ற சர்வோதய சிரமதான முகாம் பற்றிய பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். இக்கூட்டத்திற்கு கரைச்சிதுணுக்காய்ப் பிரிவு காரியாதிகாரி திரு. அ. க. விஸ்வநாதன் தலைமை வகித்தார்.

திரு. சிவசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

நமகு வேண்டியன எல்லாவற்றையும் அரசாங்கம் செய்துதரும் என எதிர்பார்க்க முடியாது. அரசாங்கம் பொருளாதாரக் கஷ்டத்தில் சிக்கியுள்ளது. எனவே எமக்குத் தேவையானவற்றை நாம் சிரமதானத்தின் மூலம் சேர்ந்து செய்யவேண்டும்.

திரு. த. நல்லதம்பி பேசுகையில் கூறியதாவது:-

ஜாதி, மத, இனபேதமின்றி நாட்டை முன்னேற்ற வேண்டும் சர்வோதய இயக்க நெறிகளினல் தான் நாட்டில் தேசிய ஒற்றுமையும் பரஸ்பர சகோதரப் பண்புகளும் வளர முடியும்.

திருவாளர்கள் சி. கந்தசாமி, விக்கினேஸ்வரன் ஆகியோரும் பேசினர்.

இம்மாதம் 19, 20, 21-ம் திகதிகளில் உருத்திரபுரம் மகாவித்தியாசாலை வீதியை அமைக்க தென்னிலங்கையிலிருந்தும் சிரமதான இயக்கத் தொண்டர்கள் வரவிருக்கிறார்கள்.

## நெடுந்தீவு பொருளாதார அபிவிருத்திச் சங்கம்

ஊர்காவற்றுறை, செவ.

நெடுந்தீவு பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தின் 4-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் மேற்கூர் பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்றது.

யாழ்ப்பாணக் கச்சேரி பிரதம குமாஸ்தா திரு. ஞா. மரியநாயகம்பிள்ளை கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். தீவுப்பகுதி எம். பி. திரு. வி. ஏ. கந்தையா இக்கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டார்.

தீவுப்பகுதியில் பொருளாதார அபிவிருத்திக்குரிய திட்டங்களை விளக்கி எம். பி. பேசுகையில், வெண்காயக் கூடை போன்ற பல அபிவிருத்தி வேலைகளில் சங்கம் முயற்சி எடுத்து உழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

புதுவருட நிர்வாகிகள் தேர்தலின் போது பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சு. இ. பசுபதி காரியதரிசி. திரு. கு. தனிநாயகம், தனதிகாரி: திரு. கு. குணநாயகம்.

## உதயதாரகை மன்றம் வெற்றி

குரும்பசிட்டி, செவ்வாய்

ஏழாலை கிழக்கு றேயல் விளையாட்டுக்கழக முதற் பிரிவுக் கோஷ்டிக்கும், குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழக முதற்பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியொன்றில் குரும்பசிட்டி 5 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது

குரும்பசிட்டிக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 67 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட் நஷ்டத்திற்கு 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். ஏழாலைக் கோஷ்டி முறையே முதலாவது, இரண்டாவது இன்னிங்ஸில் 28, 33 ஓட்டங்களைக் கைப்பற்றியது.

## யாத்திரை வழிபாடு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையார் வருகிற வெள்ளிக்கிழமை விசேஷ யாத்திரை வழிபாடு ஒன்றினை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர். காலையில் சிவதொண்டன் நிலயத்தில் ஆச்சிரம வாழ்வு நடைபெறவிருக்கிறது. மாலையில் சிவதொண்டன் நிலயத்திலிருந்து நல்லூர் வழியாக கொழும்புத்துறைக்குச் செல்வதாகிய ஒரு யாத்திரை வழிபாடு செய்யப்படவிருக்கிறது.

# அணு ஆயுத எதிர்ப்பாளர்கள் 15 பேர் கைது

## பொலிசார்மீது பழங்கள், தடிகள் வீச்சு

லண்டன், ஏப்ரல் 16

அணு ஆயுதங்களை எதிர்த்து, கடந்த நான்கு நாட்களாக இங்கு மேற்கொண்ட 35,000 அணு ஆயுத எதிர்ப்பாளர்களின் யாத்திரை நேற்று முடிவுற்ற சமயம், பொலிஸாருக்கும் அணு ஆயுத எதிர்ப்பாளர்களுக்கும் ‘சிறு மோதல்’ ஏற்பட்டது. அணு ஆயுத எதிர்ப்பாளர்கள் ஒரே வரிசையில் 15 பேர்கள்வீதம் கைகோர்த்துக்கொண்டு சென்றதால், போக்குவரத்துக்கள் தடைப்பட்டன.

ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க பொலிஸார் முயற்சித்த சமயம், அணு ஆயுத எதிர்ப்பாளர்கள், பொலிஸார் மீது அப்பிள் பழங்களையும், தடிகளையும் வீசினர். பொலிஸ் வீரர்களின் எஃகுத் தொப்பிகள் வீதியில் விழுந்து உருண்டன.

ஆர்ப்பாட்டக்காரர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதில் 100 பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். அணு ஆயுத எதிர்ப்பாளர்களில் 15 பேர் கைது செய்யப்பட்டனர்.

**கண்டனம்**

அணு ஆயுத யுத்தம் ஏற்பட்டால், பிரிட்டனை ஆட்சிபுரிவது எப்படி என்று பிரிட்டிஷ் அரசாங்கம் ஆலோசனை செய்துவருவது சம்பந்தமாக பேட்ரம் ரஸ்ஸல் பிரபு பிரிட்டன்மீது கண்டனம் தெரிவித்துள்ளார்.

## புதுவருடக் கொண்டாட்டம்

### இருவர் மரணம்

கொழும்பு, செவ்வாய்

தெகிவளை, ஸ்ரேஷன் றோட்டில் உள்ள இல்லமொன்றில் சிங்கள-இந்து புதுவருடத்தைக் கொண்டாடியவர்களில் இருவர் மேல்மாடியிலிருந்து விழுந்து மரணமானர்கள். மேல் மாடியிலிருந்து ‘பால்றூம்’, ‘பையிலா’ ஆகிய நடனங்கள் ஆடியபொழுது மோகன்தாஸ் ரண்தேனியா, றேடேனி பெர்னண்டோஎன்ற இருவரும் சறுக்கி தலைகீழாக விழுந்து மரணமானர்கள்.

ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவிற்குப் பிறகு இச்சம்பவம் நடைபெற்றது. ஆண்கள் மட்டும் கலந்துகொண்ட இக் கொண்டாட்ட வைபவத்தில் இவர்களும் பங்குபற்றி நடனமாடியபோது கால் சறுக்கி, யன்னலால் விழுந்து மரணமானர்கள். திரு. மோகன்தாஸ் ரண்தோனியா, கொள்ளுபிட்டியைச் சேர்ந்த ராஜா அன்ட் பிரிஸ் ஸ்தாபனத்தின் பொருள் வைப்பாளராகவும், திரு. பெர்னண்டோ, டெல்மஜ் போசயித் ஸ்தாபனத்தில் குமாஸ்தாவாகவும் கடமையாற்றினர். திரு. மோகன்தாஸ் ரண்தோனியா சென்ற பெப்ரவரி 17-ந் திகதியே மணம்செய்துகொண்டார்.

விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி விபத்தால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## புதுவருடத்தில் 4 கொலைகள்

கொழும்பு, செவ்வாய்

சிங்கள, தமிழ் புதுவருடத் தினத்தன்று 4 கைமோசக் கொலைகள் நடைபெற்றதாக பொலிஸ் தலைமைக்காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொலைகளுடன் இந்த வருடத்தில் மொதகம் 182 கைமோசக கொலைகள் நடைபெற்றிருக்கின்றன.

## 200 வது ஆஸ்பத்திரி சுவீப்

கொழும்பு, செவ்வாய்

மே மாதம் இரண்டாம் திகதி தேசிய ஆஸ்பத்திரி சுவீப் 200 வது தடவையாக நடைபெறவிருக்கிறது. சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவிருக்கும் இந்த சுவீப்சீட்டிழுப்பிற்கு பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை தாங்குவார். பாராளுமன்ற அங்கத்தவர்கள், மந்திரிகள், வெளிநாட்டு ராஜதந்திரிகள் ஆகியோரும் இதுவரை நடைபெற்ற சுவீப் சீட்டிழுப்புகளில் பரிசுபெற்றவர்களும், டிக்கட் ஏஜண்டுகளும் பார்வையாளராக அழைக்கப் பட்டுள்ளனர்.

200 வது சீட்டிழுப்பில் 25 மேலதிக ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படவிருக்கின்றன. இச் சீட்டின் போது கொழும்பு ஆஸ்பத்திரிகளைச் சேர்ந்த தாதிமார்களின் அணிவகுப்பு ஒன்றையும் பிரதமர் பார்வையிடுவார். இதுவரை நடைபெற்ற ஆஸ்பத்திரி சீட்டிழுப்புக்களால் 17,912,589 ரூபா ஆஸ்பத்திரி நிதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வரவு குறைவு

கொழும்பு, செவ்வாய்

நேற்று அரசாங்க இலாகாக்களில் வேலைக்கு வந்தவர்கள் தொகை மிகவும் குறைவாகவே காணப்பட்டது. ஒவ்வொரு கந்தோர்களிலும் 50-60 சதவிகிதமான உத்தியோகஸ்தர்களே சமுகமளித்தனர். ஈஸ்டர், சிங்கள-இந்து புதுவருட விடுதலைக்கு பின்னர் நேற்றைய தினம் அரசாங்க கந்தோர்கள் திறக்கப்பட்டன.

இ. போ. ச, புகையிரதப் பகுதிகளில் ஒரு சிலர் மட்டுமே சமுகமளிக்காவிட்டாலும் வழமைபோல போக்குவரத்து நடைபெற்றது.

**யாழ்ப்பாணத்தில்**

யாழ்ப்பாணத்தில் அதிகமான அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வேலைக்குச் சென்றனர். இங்கு வர்த்தக ஸ்தாபனங்கள் பலவும் மூடப்பட்டிருந்தன.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டுத்து குடும்பமே செழித்தோங்குவதைப் பார்க்கிறோம். அன்பு மட்டும் இருந்தால் போதும், எந்த நிலையையும் வெற்றியுடன் சமாளித்துவிடலாமல்லவா?

* * *

இந்தியாவில் லோக்சபையிலே மொழி வெறியர் இருவர் ‘ஆங்கிலம்’ கூடாதென்றும், ‘இந்திமட்டும்’ வேண்டுமென்றும் கூறி, கலாட்டா செய்து வெளியேற்றப்பட்டனராம். கே. எம். பி.க்கள் எங்கும் இருக்கிறார்கள் தானே!

* * *

தன்னைச் சரணென்று
தாளடைந்தேன் தன்
அடி அடையப்
புன்னைப் பொழிற் புகலூர்
அண்ணல் செய்வன
கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத்து
என்வினை கட்டறுத்து
ஏழ்நரகத்
தென்னைக் கிடக்கவொட்டான
சிவலோகத் திருத்திடுமே.

—திருநாவுக்கரசர்

# சிவாஜிகணேசன் டைரக்டராகிறார்

## சாந்திபிலிம்ஸ் படத்தை டைரக்ட் செய்வார்

நடிகர்திலகம் சிவாஜி கணேசன் விரைவில் டைரக்டராகப் போகிறார்.

'பந்தபாசம்' படத்தைத் தயாரித்த சாந்தி பிலிம்சார் அடுத்துத் தயாரிக்கவிருக்கும் படத்தை சிவாஜி கணேசன் டைரக்ட் செய்வார் என்று தெரிகிறது.

இதற்கான ஏற்பாடுகள்செய்யப்பட்டுவருகின்றன.

நாடக நடிகராகவிருந்து 'பராசக்தி' படத்தின் மூலம் திரையுலகில் கால் வைத்த சிவாஜி கணேசன் தமது நடிப்புத் திறமையால் 'நடிகர் திலகம்' என்ற பெயரைப் பெற்ருர். மிகக் குறுகிய காலத்தில் ஏராளமான படங்களில் நடித்துள்ள சிவாஜி கணேசன் படத் தயாரிப்பாளராகி சில படங்களையும் தயாரித்திருக்கிருர்.

இப்பொழுது முதல் நடவையாக ஒரு படத்தை டைரக்ட் செய்யப்போகிருர்.



இதற்கு முன் இப்பொழுது சிவாஜி பிலிம்ஸ் தயாரிக்கும் ஒரு படத்தின் டைரக்ஷன் மேற்பார்வைப் பொறுப்பை அவர் கவனிக்கிருர்.

## 'கலையரசு' வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம்புதன்

நாடகங்களும் நாடகமன்றங்களும் இந்நாட்டில் அதிகரித்துவருவது பாராட்டுதற்குரியது. எனினும் அவை எந்தவகையில் கலைவளர்ச்சியைக் கருத்திற்கொண்டு செயல்படுகின்றன என்பதனை அறிய வேண்டும்" என்று கலையரசு சொர்ணலிங்கம் ஞாயிற்றுக்கிழமை மாலை நகரமண்டபத்தில் 'கலையரசு' பத்திகை வெளியீட்டு விழாவில் பேசுகையில் கூறினர். இவ்வெளியீட்டுவிழாவிற்கு புலவர் ம. பார்வதிநாதசிவம் தலைமை வகித்தார்.

சொர்ணலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

விமரிசகன் நடுநிலைமைதவரு திருக்கவேண்டும். நாடக கலையை அறியாத ஒருவர் நாடக விமரிசகராக இருககக் கூடாது. உள்ளதை உள்ளவாறு எழுதி ஊக்குவிக்க வேண்டியது பத்திரிகைகளின் கடமையாகும்.

திரு. தேவன், கலையரசு பத்திரிகையை வெளியிட்டு வைத்துப் பேசுகையில், கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டுமெனவும் அதற்காக இப்பத்திரிகை உழைக்கும் எனவும் கூறினர்.

ஜெயசக்தி மன்றச் செயலாளர் திரு. குகதாசன் வாழ்த்துப்பத்திர மொன்றினை கலையரசுவிடம் வழங்கினர். திரு. ஜோ. ஏ. எம். தாஸ் நன்றியுரை நல்கினர். கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## ஓவியங்களைப் பாதுகாக்க புதிய கருவிகள்

ஓவியங்கள், வெண்கலச்சிலைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கவும், ஆராய்ச்சிக்குத் துணைபுரியவும் நவீனமான விசேஷரக சாதனங்களைச் சென்னை நகரத்திலுள்ள அரசாங்க அரும் பொருட்காட்சிசாலைக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

உலோகப் பொருட்களைச் செப்பனிட்டு மீட்கும் மின் பகுப்புக் கருவி ஒன்று இக் காட்சிச்சாலையில் இருக்கிறது. இதுபோன்ற கருவி இந்தியாவில் வேறு எங்கும் இல்லை. காட்சிச்சாலையில் இரசாயன முறைப் பாதுகாப்புப் பகுதியில் இருக்கும் இக்கருவியுடன் கூட, பண்டைய உலோகப் பொருள்களை ஆராய்ச்சி செய்வதற்குப் பல வசதிகள் செய்யப்படவிருக்கின்றன.

எக்ஸ்ரே மூலமும், அப்பால் ஊதாக்கதிர்கள் செலுத்தியும் ஓவியங்கள் உண்மையானவையா, போலியா என்று கண்டறியத்தக்க கருவிகளும் வாங்கப்பெறும்.

கலைப்பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கென, இரசாயனக் காப்பு வசதிகளடங்கிய இரண்டு மாடிகள் கொண்ட ஏர்கண்டிஷன் கட்டடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசப் பேணுகைக் கழகத்தில் உறுப்பினராக இந்தியாவில் இருக்கும் ஒரே காட்சிச்சாலை சென்னைக் காட்சிசாலை என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் தயாராகும் இந்திப் படம்

ஷம்மிகபூரும், சாதனாவும் பிரதம பாகங்களில் நடிக்கும் "ராஜ் குமார்" என்னும் இந்திப்படத்தின் படப்பிடிப்புகள் ஜூனிலிருந்து மீண்டும் தொடங்கும், இப்படத்தை சரவணா பிலிம்சார் தயாரிக்கின்றனர். பிரிதிவிராஜ் கபூரும் நடிக்கும் இப்படத்தை கே. சங்கர் டைரக்ட செய்கிருர்.

ஒரே சமயத்தில் மூன்று படங்களைத் தயாரிக்கும் சரவணாபிலிம்சாரின் இதர இரண்டு தமிழ்ப்படங்களான "யாருக்காக அழுதான்?", "இது சத்தியம்" காட்சிகள் துரிதமாக நெப்டியூன் ஸ்டுடியோவில் தயாராகின்றன.

## சிவாஜி-சரோஜாதேவி நடிக்கும் கலர்ப்படம்

சிவாஜி புரடக்சன்சார் தயாரிக்கவிருக்கும் ஈஸ்ட்மென் கலர் படத்திற்கான காட்சிகள் சோதனையில் வெற்றிகரமாக இருந்ததால், அப்படத்தின் படப்பிடிப்பிற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டுள்ளன.

வங்காளக் கதையான "சேஷனு" வைத்தழுவிய இப்படத்தில் சிவாஜியும், சரோஜாதேவியும் நடிக்கின்றனர். தாதா மிராசி டைரக்ஷன் பொறுப்பை ஏற்றுள்ளார்.

'புதிய பறவை' என்ற பெயரில் தயாராகும் இப்படத்தில் எம். ஆர் ராதா, சௌகார் ஜானகி ஆகியோரும் நடிக்கின்றனர்.

டைரக்ஷன் மேற்பார்வைப் பொறுப்பை நடிகர் சிவாஜி கணேசனே கவனிப்பார். சக்தி கிருஷ்ணசாமி வசனம் எழுதும் இப்படத்திற்கான பாடல்களை கண்ணதாசன் எழுதுகிருர்.

## கலை அரங்கம்

# எஸ். எஸ். ஆர், ஸ்ரீதர் டில்லி செல்கின்றனர்

## ஜனதிபதியிடம் பரிசுபெறுவர்

இம்மாதம் 21-ம் தேதி டில்லியில் நடைபெற விருக்கும் ஜனதிபதியின் பரிசளிப்பு விழாவிற்குக் கிட்டத்தட்டத் தென்னக சினிமா கலைஞர்கள் அனைவரும் டில்லிக்குச் செல்கிருர்கள். இவ்விழாவை பகிஷ்கரிக்கும் முறையில் தென்னகக் கலைஞர்கள், விழாவுக்குச் செல்லமாட்டார்கள் என்று வந்த செய்திக்கு ஆதாரமில்லை என்று சினிமா வட்டாரங்கள் கூறுகின்றன.

"சாரதா" படத்தில் பிரதம பாகங்களில் நடித்த எஸ், எஸ். இராஜேந்திரனும், விஜயகுமாரியும் மேற்படி படத்தின் டைரக்டரான கே. எஸ். கோபாலகிருஷ்ணனுடன் ஏப்ரல் 20-ல் பரிசு பெறுவதற்காக டில்லி செல்வார்கள். இப்படத்திற்கு ஜனதிபதியின் சான்றிதழ் அளிக்கப்படும.

"நெஞ்சில் ஓர் ஆலயம்" டைரக்டர் ஸ்ரீதரும், நடிகர் கல்யாண் குமாரும் அதேதேதியில் விமானம் மூலம் டில்லி செல்கின்றனர். தேவிகாவுக்கு அன்று படப்பிடிப்பு இருப்பதால் அவர் செல்லமாடடார். இப்படம் சிறந்த தமிழ்ப்படத்திற்கான வெள்ளிப்பதக்கம் பெறுகிறது.

'அன்னை' படத்தயாரிப்பாளர் ஏ. வி. மெய்யப்பன், டைரக்டர்கள் கிருஷ்ணன்—பஞ்சு, நடிகை பானுமதி ஆகியோரும் மேற்படி விழாவில் கலந்துகொள்வார்கள்.

## சிறைப் பறவை இலக்கியக் குயிலாயிற்று

ரோம், ஏப்ரல் 15

பதினெட்டு ஆண்டுகள் சிறைவாசம் புரிந்த ஒரு சாதாரணக் குற்றவாளியான சில்வேனே செசெரினி ஓர் எழுத்தாளராக விடுதலையாகி வெளிவந்திருக்கிருர். அதுமட்டுமல்ல கடந்த மாதம் விடுதலையான அவர் இதற்குள் பெயர்பெற்ற எழுத்தாளராக ஆகிவிட்டார்.

தொடர்ச்சியான பல குற்றங்களுக்காக 1943-ம் ஆண்டு, 29 வயதான செசெரினிக்கு 20 ஆண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவரை ஒரு சிறையிலிருந்து இன்னெரு சிறைக்கு அடிக்கடி மாற்றிக்கொண்டே யிருந்தார்கள். இந்த அனுபவத்தை அடிப்படையாக வைத்து அவர் ஒரு புத்தகம் எழுதினர். அப்புத்தகத்தை விமரிசகர்கள்பெரிதும் வரவேற்றுள்ளனர்.

# 'காதலிக்க நேரமில்லை' கதாநாயகன் வேட்டை

## 12,000 பேர் விண்ணப்பம்

தயாரிப்பாளரும் டைரக்டருமான ஸ்ரீதர், ஈஸ்ட்மென் கலரில் தயாரிக்க இருக்கும் 'காதலிக்க நேரமில்லை' படத்தில் கதா நாயகனக நடிப்பதற்கு 12 ஆயிரம் விண்ணப்பங்கள் வந்தன.

தனது கதைக்கு நாயகனைக் கல்லூரி மாணவர் ஒருவரைத் தேடிய ஸ்ரீதர், 12 ஆயிரம் விண்ணப்பதாரர்களில் 40 பேரைப் பேட்டிக்கு அழைத்தார். 23 பேர் வந்தனர். இவர்களில் நான்கு பேருக்கு திரைக்குத் தகுந்த முகவெட்டும், குரலும் இருந்தன. ஆனல் மூன்று பேரால் வசனங்களைச் சரிவரச் சொல்லமுடியவில்லை, எல்லாமே திருபதிகரமாக இருந்த மருத்துவப்பட்டதாரி ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனல் அவருக்கு மேற்படிப்புக்கு அமெரிக்கா செல்ல அழைப்பு வந்ததால், ஸ்ரீதர் மீண்டும் கதாநாயகனைத் தேடிக்கொண்டிருக்கிருர்.

இப்படத்திற்கான நடனக் காட்சி ஏற்கெனவே படமாக்கப்பட்டுவிட்டது. ஆனல் தகுந்த கதாநாயகன் இல்லாததால் "காதலிக்க நேரமில்லை" வளராமல் இருக்கிறது.

## தந்திரக் காட்சிகள் நிறைந்த சிந்துபாத்

ஹாலிவுட்டில் தயாரான "கேப்டன் சிந்துபாத்" என்னும் ஆங்கிலப்படத்தில் ஏராளமான மந்திர தந்திரக் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இக் காட்சிகளைத் தயாரிக்க தந்திரக் காட்சிகளைப் படம் பிடிப்பதில் நிபுணரான ஜெர்மன் காமராமேன் ஈஜின் சுஃப்தான் அமர்த்தப்பட்டார். மேலும் தந்திரக் காட்சிகளில் நிபுணர்களான 11 பேர் இப்படத்தை மந்திர தந்திரங்களால் நிரப்பியிருக்கின்றனர்.

சிந்துபாத்தில் மாயாஜாலக் கடற்பயணம், ருக்ஸ் எனப்படும் இராட்சதப் பறவைகளின் தாக்குதல்கள் கண்ணுக்குத் தெரியாத பலதலைப் பூதத்தோடு சிந்துபாத்சண்டை செய்வது ஆகிய மயிர்க் கூச்செறியும் காட்சிகள் மிகஅற்புதமானவை

## கலரில் கர்ணன் துரித வளர்ச்சி

கலரில் பிரமாண்டமாகப் பத்மினி பிக்சர்ஸ் தயாரிக்கும் "கர்ணன்" படத்துக்கான வெளிப்புறக்காட்சிகள், மைசூர் மாநிலத்தில் அண்மையில் பிடிக்கப்பட்டன.

தற்போது உட்புறக்காட்சிகள் விஜயா ஸ்டுடியோவில் தயாராகி வருகின்றன.

## புடவைக்கடைமீது டெயிலர் வழக்கு

பிரபல ஹாலிவுட் நடிகை எலிசபெத் டெய்லர் பெரிய ஜவுளிக்கடை ஒன்றின்மீது 10 இலட்சம் டாலருக்கு வழக்குத் தொடர்ந்திருக்கிருர். அந்தக் கடையில் தயாரிக்கப்படும் பெண்கள் அணியும் சட்டை பிளவுசின் வியாபாரத்தைப் பெருக்குவதற்காக தன்னுடைய அனுமதியின்றி தனது புகைப்படத்தைப் பயன்படுத்தி விளம்பரம் செய்து வந்ததற்காக அவர் வழக்குத்தொடர்ந்துள்ளார். அதற்காகத் தனக்கு அந்தக் கடைக்காரர் 10 இலட்சம் டாலர் கொடுக்கவேண்டுமெனவும் கோரியிருக்கிருர்.



யார்ப்பாண நகரமண்டபத்தில் விரைவில் நடக்கவிருக்கும் "சத்திய சோதனை" நாடகத்தில் இடம்பெறவிருக்கும் ஒரு கட்டம்.

## "சத்திய சோதனை"

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் 'சத்திய சோதனை' என்ற தமிழ் வேதாகம சரித்திர நாடகத்தை அரங்கேற்ற சிலாபம் வியோள் நாடகமன்றத்தினர் ஒழுங்குகள் செய்து வருகின்றனர். திரு. வியோபோள் லாவின் டைரக்ஷனில் நடைபெறும் இந்த நாடகத்தில் சோமாஸ்கந்தர், நிக்குளாஸ், லலிதா, ஜெயகௌரி ஆகியோர் நடிக்கின்றனர்.

# "நேரு" இல்லம் வெற்றியீட்டியது

மாவிட்டபுரம், செவ்வாய் காங்கேசன்துறை விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் காங்கேசன்துறையில் நடைபெற்றன. காந்தி (கா), நேரு (நே) இல்லங்கள் போட்டியிட்டன. நேரு இல்லம் 233 புள்ளிகளும், காந்தி இல்லம் 201 புள்ளிகளும் பெற்றன. விளையாட்டுப்போட்டி முடிவுகள் வருமாறு:

**மேற்பிரிவு**

100 யார் ஓட்டம்: சு. சிவஞானம் (கா), வி. விஜயகமூர்த்தி (கா), க. தனபாலசிங்கம் (நே).

**மேற்பிரிவு**

அரை மைல் ஓட்டம்: சு. பரமேஸ்வரன் (நே), த. கணேசரத்தினம் (நே), வே. விஜயகமூர்த்தி (கா).

**அதிமேற்பிரிவு**

440 யார் ஓட்டம்: ந. நாகராசா (கா), சு. பாலசிங்கம (நே), செ. நடராசா (நே).

**மத்தியபிரிவு**

100 யார் ஓட்டம்: கே. தியாகராசா (கா), து. செல்வராசா (நே), க. தெய்வரத்தினம் (கா).

**அதிமேற்பிரிவு**

தடையோட்டம்: செ. நடராசா (நே), ந. நாகராசா (கா), வே. இராசரத்தினம் (நே).

**மேற்பிரிவு**

தடையோட்டம்: கு. ஸ்கந்தராசா (கா), த. கணேசரத்தினம் (நே), சு. சிவஞானம் (கா).

அஞ்சல் ஓட்டக்கிண்ணம்: நேருஇல்லம்.

கொட்டகை: காந்தி இல்லம்.

ஒழுங்கு: நேரு இல்லம்.

உடற்பயிற்சி: நேருஇல்லம்.

சகல விளையாட்டுத்துறைகளில் இரு இல்லங்களும் சமபுள்ளிகளைப் பெற்றுக் கொண்டன.

**சாம்பியன்**

அதிமேற்பிரிவு: நா. பாலசுப்பிரமணிம் (கா).

மேற்பிரிவு: சு. சிவஞானம் (கா).

மத்தியபிரிவு: க. தியாகராசா (கா)

அதிகீழ்ப்பிரிவு: ஆ. இராஜமாணிக்கம் (நே).

கீழ்ப்பிரிவு: தி. இந்திரகுமாரன் (கா).

பாலர்பிரிவு: தி. சந்திரகுமாரன் (நே).

கயிறு இழுத்தல்: காந்தி இல்லம்.

விநோதஉடை: ஆ. இராசமாணிக்கம் – பாரதிவேஷம், இ. மகேந்திரன் – சிங்கள மரக்கறி வியாபாரி, வே. இராசரத்தினம் – குஷ்டரோகி.

**மேற்பிரிவு**

1 மைல் ஓட்டம்: த. கணேசரத்தினம் (நே), மு. சுப்பிரமணியம் (நே), நா. நவரத்தினம் (நே).

**அதிமேற்பிரிவு**

1 மைல் ஓட்டம்: ஆர். பாலசுப்பிரமணியம் (கா), நா. நாகராசா (கா), செ. நடராசா (நே).

**மேற்பிரிவு**

பரிதிவட்டம் எறிதல்: சு. பரமேஸ்வரன் (நே) 105' 6" (புதிய சாதனை), சு. சிவஞானம் (கா), எஸ். மகேஸ்வரன் (நே).

**அதிமேற்பிரிவு**

நா. பாலசுப்பிரமணியம் (கா), நா. தில்லையீசன் (நே), சு. பாலசிங்கம் (நே).

**மத்தியபிரிவு**

சாக்கு ஓட்டம்: சோ. கணேசநாதன் (கா), ஆர். மாணிக்கவாசகர் (நே), சி. தவமலர் (கா).

**கீழ்ப்பிரிவு**

பலூன் உடைத்தல்: தி. இந்திரகுமாரன் (கா), ச. சிவலிங்கம் (கா), இ. பாலேந்திரன் (நே)

**கீழ்ப்பிரிவு**

50 யார் ஓட்டம்: இ. பாலேந்திரன் (நே), மு. இராசேஸ்வரன் (கா), ச. சிவலிங்கம் (கா).

**அதிகீழ்ப்பிரிவு**

பாண் உண்ணல்: தி. திலகநாதன் (நே), இ. வரதராசா (நே), பொ. சிவஞானசுந்தரம் (கா).

சைக்கிள் மெதுவான ஓட்டம்: நா. பாலசுப்பிரமணியம் (கா), சு. பாலசிங்கம் (நே), க. தனபாலசிங்கம் (நே).

**அதிமேற்பிரிவு**

100 யார் ஓட்டம்: சு. பாலசிங்கம் (நே), க. முருகப்பெருமான் (கா), வே. இராசரத்தினம் (நே).

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நடேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. கிருஷ்ணபிள்ளை பேசுகையில் விளையாட்டுத்துறையில் மாணவர்கள் காட்டும் ஆர்வம் கல்வித்துறையிலும் காட்டப்பட வேண்டுமெனக் கூறினர். வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசுகளை வழங்கிய நீச்சல் வீரர் ஆனந்தன் இலங்கையில் போதிய பயிற்சியின்மையே விளையாட்டுத்துறையில் பின்தங்கியிருப்பதற்குக் காரணமாகும் என்று கூறினர். திரு. வ. தவராசா வரவேற்புரை நல்கினர். திரு. ஆ. சங்கரப்பிள்ளை நன்றி கூறினர்.

## குப்பிளான் கோஷ்டி வெற்றி

குரும்பசிட்டி, செவ்வய்ா குப்பிளான் விக்னேஸ்வராக் கோஷ்டிக்கும் சுன்னாகம் ஜெருக்கட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான ஒரு கைப்பந்தாட்டப் போட்டியில் குப்பிளான் கோஷடி 2—1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. முதலாம் போட்டியில் குப்பிளானும், இரண்டாம் பேட்டியில் சுன்னாகமும் வெற்றி பெற்றன. எனவே மூன்றும் போட்டிதிகில் மிக்கதாக அமைந்தது. சுன்னாகம் கோஷ்டியினர் மிகவும் திறமையாக விளையாடிய போதிலும் இறுதியில் தோல்வியுற்றனர்.

## கிரிக்கட்போட்டி

யாழ்ப்பாணம் புதன் ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை, கடலணை மைதானத்தில் ஓர் கிறிக்கட் பந்தாட்டப் போட்டி, மணமாகிய வர்களுக்கும் வாலிபர்களுக்கும் இடையில் நடைபெற்றது. மணமாகியவர்கள் கோஷ்டிக்கு திரு. டி. ஜேம்ஸும் (முன்னுள் மாநகரசபை உறுப்பினர்), வாலிபர் கோஷ்டிக்கு திரு. ஜே. ஜூசைப்பிள்ளையும் தலைமைதாங்கினர். முதல் ஆட்டத்தில் மணமாகியவர்கள் கோஷ்டியில் திரு. டி. ஜேம்ஸ், செனட்டர் ஜி. நல்லையா ஆகியோர் ஒரு மித்துத் துடுப்பெடுத்தாடினர்

ஆட்டத்தைப் பார்க்கப் பெருந்திரளான மக்கள் கூட்டம் மைதானத்தில் குழுமியிருந்தது. பர்வையாளருக்கு சிற்றுண்டி, தேநீர் வழங்கப்பட்டன. ஆட்டம் வெற்றி தோல்வியின்றி சமமாக முடிவடைந்தது. இரு கோஷ்டியின் தலைவர்களுக்கும், திறமையாக விளையாடிய வீரர்களுக்கும் வைத்தியர் எம். சின்னப்புவினுல் வெள்ளிக்கிண்ணங்கள் பரிசில்களாக வழங்கப்பட்டன.

திரு. ஐயா கோஷ்டியினரின் ஹாஸ்ய நாடகம் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது.

# வானொலி நிகழ்ச்சிகள்

புதன் 17-4-63

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள். 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை. 6-45 கிளாரினெட்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 ஆர். முத்துசாமி—வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 எம். பி. செல்வரத்தினம் —பேச்சு, 9-30 பி. முத்துக்குமாரசாமி—பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 மணித்திருநாடு (சென்னை அஞ்சல்)

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியஇசை, 1-50 மெல்லிசை, 2-10 சீதா பாலகிருஷ்ணன்—வீணை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 செய்தி விமர்சனம் (சென்னை அஞ்சல்), 7-45 'பரிசுக் குழந்தை'—நாடகம், 8-00 'ஸ்வாதி மன்னர்'—வரலாற்றுச் சித்திரம், 9-15 நல்லுரை, 9-20 பொன்னொளிர் பாரதம்—இசைநிகழ்ச்சி, 9-45 இடைவேளை, 9-50 இசைமாலை.

## பாடசாலைகள் விளையாட்டுப்போட்டி

வவனியா, திங்கள் வவனியா—மன்னர் பாடசாலை விளையாட்டுப்போட்டி வவனியா மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இரு தினங்களாக நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் எருக்கலம்பிட்டி மகா வித்தியாலயமும், பெண்கள் பிரிவில் வவனியா மகாவித்தியாலயமும் சாம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டன.

பரிசளிப்புவிழாவில் வவனியா கல்வி அதிகாரி திரு. எஸ். தணிகாசலம், அரசாங்க அதிபர் திரு. பிரேமவர்த்தன ஆகி திருமதி பிரேமவர்த்தன மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினர்.

## தேங்காய்ப் போர்

யாழ்ப்பாணம், திங்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை புதிய பஸ்நிலையத்தின் முன்பாக தேங்காய்ப்போரடி நடைபெறவிருக்கிறது. யாழ்ப்பாணக் கோஷ்டியும், சண்டிலிப்பாய் கோஷ்டியும் இதில் பங்கு கொள்கின்றன. யாழ்ப்பாணக் கோஷ்டிசார்பில் திரு. சி. கந்தசாமி, திரு. இ. புவிலிங்கம், திரு. ச. துரைராசா ஆகியோரும் சண்டிலிப்பாய்க் கோஷ்டியின் சார்பில் திரு. வே. மாணிக்கம், திரு. மா. குமாரசாமி, திரு வே. தெய்வேந்திரன் ஆகியோரும் பங்கு பற்றுகிறார்கள்.

# பரிசு பெற்றவர்கள் பகிஷ்கரிப்பு

## வடமராட்சி புதுவருட விளையாட்டுப் போட்டியில்

பருத்தித்துறை, செவ்வாய் புதுவருட தினத்தன்று நடைபெற்ற 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியில் 1-ம், 4-ம் இடங்களைப்பெற்ற வீரர்களைத்தவிர ஏனையோர் பரிசுப் பொருட்களையோ சான்றிதழ்களையோ பெருது பகிஷ்கரித்து வெளியேறினா.

இப்போட்டியில் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களே கலந்துகொள்ளலாம் என போட்டிக்கான விதிகளில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் 1-ம் இடத்தைப்பெற்ற வீரர் கனகு என்பவர் அச்சுவேலியைச் சேர்ந்தவர் என பகிஷ்கரித்தவர்கள் புகார்செய்துள்ளனர்.

முதலாம் இடத்தைப்பெற்ற வீரர் அச்சுவேலியைச் சேர்ந்தவர் ஆகையால் 2-ம் இடத்தைப்பெற்ற வீரரான புலோலி தெற்கைச் சேர்ந்த இராமநாதன் என்பவரே பரிசுக்குரியவர் என வாதாடினராம் இராமநாதன் கடந்த ஆண்டில் இதே போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றவர்.

பரிசுகளையும் சான்றிதழ்களையும் பகிஷ்கரித்தவர்களில் பெரும்பாலோர் புலோலி தெற்கைச் சேர்ந்தவர்கள்.

முதல் பரிசுக்குரியவரின் வசிப்பிடம் சம்பந்தமாக பூர்வாங்க விசாரணையொன்றை நடாத்தி நீதிவழங்கும் படி பகுதிக்காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்டிடம் சம்பந்தப்பட்ட வீரர்கள் கோரியிருப்பதாகத் தெரியவருகிறது.

## தரைக்கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தரைக்கோஷ்டியினருக்கும் கடற்ெருழில் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் தரைக்கோஷ்டி 5—1 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. ம. ஆசீர்வாதம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## விளையாட்டுப் பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் புனித்வளன் விளையாட்டுக் கழகத்தின் 15-வது ஆண்டுவிழா திரு. ஆரோக்கியநாதன் தலைமையில நடைபெற்றது. பிரதம விருந்தினராக மாநகரசபை ஆணையாளர் திரு டி. டி. ஜயசிங்கா கலந்து கொண்டார். கெயர் அமெரிக்கக் கூட்டுஸ்தாபனப் பிரதிநிதி ஹார்வே எஸ். குறய்டர் அமெரிக்க மக்களின் நன்கொடையாக 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியுள்ள தொழில் நுண் கருவிகளையும் விளையாட்டுப் பொருள்களையும் கழகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினர். பலர் உரைநிகழ்த்தினர் கழக நாடகமன்றத்தினரால் "யூலியஸ்சீசர்" என்னும்நாடகம் அரங்கேற்றப்பட்டது.

நியூயோர்க், ஏப்ரல் 16 அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் மாநிலத்திலிருக்கும் ஜேஸ்பர் நகரில் கௌரவ நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் திருமதி கிளாரா மோயர் 100 வயதானவர்.

'பிரீடம்' மார்க் கற்பூரம்




கற்பூரம் வாங்கும்போது 'பிரீடம்' மார்க் கற்பூரம். என்றே கேட்டு வாங்குங்கள். இது ஓர் சிறந்த தயாரிப்பு

தயாரிப்பாளர்கள், பிரீ லங்கா இன்டஸ்ட்ரீஸ். மினுவாங்கொட.

# "டட்லியின் கனவு நனவாகாது"

—கெஸ்பவ எம். பி.

பிலியந்தலை, செவ்.

"இலங்கைப் பிரதமராகத் தாம் வரமுடியும் என்று திரு டட்லி சேனநாயக்கா எண்ணினல் அது வெறும் கனவாகவே தான் முடியும்" என்று பிலியந்தலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கெஸ்பவ எம். பி. திரு. சோமசிறி சந்திரசிறி பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அரசியல் துறையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஈடுபட்டதன் பின்னர் திரு. டட்லி சேனநாயக்காமீது கொண்டிருந்த பற்று மக்களிடம் வெகுவாகக் குறைந்துவிட்டதென்றும், ஐக்கியதேசியக் கட்சியினல் விரிக்கப்பட்ட வலையில் மக்கள் விழவில்லையென்றும் கூறினர்.

இலங்கைப் பிரதமர் பதவி தமக்குக் கிடைக்கலாம் என்று திரு. டட்லி சேனநாயக்கா எண்ணினல் அது வெறும் கனவாகவேதான் முடியும் என்றும் அவர் கூறினர்.

ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு. மகாநாமசமரவீரா பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்;-

'கடந்த இரண்டரை வருடங்களாக இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் அதிகமாகக் காணப்பட்டபோதிலும், ஏழை மக்களுக்குத் தனது சேவையை அளிக்க இந்த அரசாங்கம் தவறவில்லை.

திரு டட்லி சேனநாயக்கா, மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு நாட்டின் பல பகுதிகளுக்கும்சென்ருலும், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது தங்களுக்கு ஏற்பட்ட துயரங்களை மக்கள் மறக்க மாட்டார்கள். காலம் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, 1956-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பின்னர்தான் மக்களுக்கு நல்ல சேவையளிக்கப்பட்டது. காலம் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கைகளைப் பின்பற்றிச் செல்லும் தற்போதைய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மக்களுக்கு நல்ல சேவையளித்து நாட்டின் நெருக்கடிகளைத் தீர்த்து வைப்பார் என்பதில் சந்தேகமில்லை.

## மேகரோகம் அதிகரிப்பு

பொரளை, செவ்வாய்

நாடு பூராவும் மேகரோகம் அதிகமாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாடசாலை செல்லும் இளைஞர்கள்தான் அதிகமாக இந்த நோயினல் பீடிக்கப்பட்டிருக்கிருர்கள் என அறிவிக்கப்படுகிறது

## விசேஷ ரயில்கள்

புதுடில்லி, ஏப். 17

விடுமுறை தினங்களில் உல்லாசப் பிரயாணத்தை மேற்கொள்பவர்களுக்கு வசதியளிக்கும் முகமாக புதுடில்லிக்கும் சென்னைக்குமிடையே இன்று முதல் மே மாதம் இறுதிவரை விசேஷ ரயில்கள போககுவரத்துச் சேவையில் ஈடுபடும்.

# பாக். வெளிவிவகார கொள்கை மாறும்

## ஜனுப் புட்டோ அறிவிப்பு

### சீன ஆக்கிரமிப்பு ஆபத்து இந்தியாவுக்கு இல்லையாம்

கராச்சி, ஏப். 16

**மேற்கு நாடுகள் இந்தியாவுக்கு நீண்டகால ராணுவ உதவி அளிக்கத் தொடங்கினல் பாகிஸ்தான் தனது வெளிவிவகாரக் கொள்கையில் முக்கியமான அடிப்படை மாற்றங்கள் செய்ய நேரிடும் என்று பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜனுப் புட்டோ நேற்றிரவு இங்கு கூறினர்.**

"காஷ்மீர் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணப்படாமல் இந்தியாவுக்கு நீண்ட கால ராணுவ உதவியளிப்பதற்கு எமது நேசநாடுகள் ஆரம்பித்தால் நாம் எமது வெளிவிவகாரக் கொள்கையில் முக்கியமான அடிப்படை மாற்றங்கள் செய்யவேண்டியேற்படும்" என்று ஜனுப் புட்டோ கராச்சி சர்வதேச விவகாரக் கழக வருடாந்த விருந்துபசார வைபவத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

ஜனுப் புட்டோ மேலும் பேசுகையில் இப்பொழுது இந்தியாவுக்கு ராணுவ உதவி அளிக்கும் மேற்கு நாடுகள் விரைவில் தாங்கள் அளிக்கும் ராணுவ உதவியினல் தங்களுக்கோ ஆசியாவின் அல்லது உலக சமாதானத்துக்கோ நன்மையில்லையென்பதை உணர்ந்து கொள்ளும் என்றும் ஜனுப் புட்டோ கூறினர்.

**ஆக்கிரமிப்பு ஆபத்து இல்லை**

இந்தியா கூறிக்கொள்ளுவதுபோல சீனுவினல் இந்தியாவுக்கு அக்கிரமிப்பு அபாயம் எதுவும் இல்லையென்று பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி சொன்னர். 'எல்லைப் பிரச்னையை வைத்துக்கொண்டு இந்தியா கூச்சலிடுவது, இயன்ற மட்டும் அதிக அளவு அந்நிய ராணுவ உதவியைப் பெறுவதற்காகத்தான்' என்றும் ஜனுப் புட்டோ கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கம்யூனிஸ்ட் சீனுவுக்கு எதிராக ராணுவ ஆயத்தங்களைச் செய்துகொண்டிருக்கும் அதே சமயம் கம்யூனிஸ தத்துவத்தைக் கடைப்பிடிக்கும் சோவியத் யூனியனுடன் நட்புறவு கொண்டாடுவது விந்தையாக இருக்கிறதென்ருர்.

# சுமார் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் தர்மப் பணம்

## க்ஷயரோக உதவி பெறுவதில் யாழ்ப்பாணம் 2-ம் இடம்

கொழும்பு, செவ்வாய்

**1960-61-ம் ஆண்டில் முன்னைய வருடத்தைவிட 1,528,156 ரூபா அதிகமாக தருமப் பணமாக வழங்கப்பட்டுள்ளது. 1960-61-ம் ஆண்டில் மட்டும் 16,000,000 ரூபா தர்மப் பணமாக வழங்கப்பட்டுள்ளது. க்ஷயரோக உதவி நன்கொடை அளிப்பதில் 60-61-ம் வருடத்தில் 8,725,771 ரூபா செலவிடப்பட்டது; 16,789 குடும்பங்கள் இந்த உதவியைப் பெற்றுள்ளன. ஆனல் 59-60-ம் ஆண்டில் 16,074 குடும்பங்கள் க்ஷயரோக உதவி பெற்றன. இதற்காக 8,565,362 ரூபா செலவிடப்பட்டுள்ளது.**

1960-61-ம் ஆண்டில் 16,000,000 ரூபா பொதுத் தர்மப் பணமாகவும், 8,725,77197 ரூபா க்ஷயரோக நோயாளிகளுக்கு உதவிப் பணமாக வழங்கப்பட்டதாகவும் சமூக சேவைப் பகுதியின டைரக்டர் திரு. பி. டி. உடுவெல தமது 60-61-ம் நிதி ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ரீதியில் நோக்கும் பொழுது கொழும்பில் உள்ளவர்களுக்கு 2,736,074 ரூபா 60 சதமும், யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுக்கு 1,305,535 ரூபாவும் மட்டக்களப்பில் உள்ளவர்களுக்கு 679,805 ரூபாவும் திருக்கோணமலையில் உள்ளவர்களுக்கு 188,672 ரூபாவும் தர்மப்பணமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது. மன்னரில் உள்ள மக்களுக்கு 115,733 ரூபா 50 சதமும் வவனியாவில் உள்ள மக்களுக்கு 80,804 ரூபாவும் தர்மப் பணமாக வழங்கப்பட்டுள்ளது. கூடிய தொகை தர்மப் பணம் பெற்ற மாவட்டங்களில் கொழும்பு முதலாவது இடத்தையும் கண்டி இரண்டாவது இடத்தையும், யாழ்ப்பாணம் மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன. மாவட்ட அட்டவணையில் 22 மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**க்ஷயரோக உதவி**

1960-61 ம் நிதிவருடத்தில் க்ஷயரோகஉதவிப்பணம் அளிப்பதில் ரூ. 8,725,771.97 செலவிடப்பட்டுள்ளதாக அறிக்கை தெரிவிக்கின்றது. 1960-61 ம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்திற்கு 1,969,486 ரூபா செலவிடப் பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு ரூ. 1,014, 619.23 செலவிடப்பட்டதாகவும் அறிக்கை குறிப்பிடுகின்றது. மட்டக்களப்பு அம்பாறைப் பகுதிக்கு க்ஷயரோக உதவிப்பணம் கொடுப்பதில் 415, 970 ரூபாவும், திருக்கோணமலைக்கு 132,330 ரூபாவும் வவனியாவிற்கு 50,000 ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாக அறிக்கை தெரிவிக்கின்றது. க்ஷயரோக உதவிப்பணம் பெறுபவர்கள் மாகாண ரீதியில் நோக்கும் பொழுது கொழும்பு முதலாவது இடத்தையும், யாழ்ப்பாணம் இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றன. இந்த அட்டவணையில் மொத்தம் 20 மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## ஆலோசனை

லண்டன், ஏப். 16

காங்கோ தேசிய இராணுவ வீரர்களுக்கு பயிற்சியளிப்பது சம்பந்தமாக காங்கோ வெளிவிவகார மந்திரியும் ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டும் ஆலோசனை நடத்தினர்கள்.

## டிராலிபஸ்களின் குறைந்த சேவை

கொழும்பு, செவ்.

மொத்தமாகவுள்ள 52 டிராலிபஸ்களில் நேற்று 30 டிராலிபஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டன. கொழும்பு மாநகரசபை டிராலிபஸ்களில் வேலைபார்க்கும் ஊழியர்களில் சுமார் 50 சதவிகிதத்தினர் வேலை செய்த காரணத்தினல் தான் 22 டிராலிபஸகள் நேற்று சேவையில் ஈடுபடவில்லை எனத் தெரியவருகிறது.

## நேரடி நடவடிக்கை: இன்று தெரியலாம்

யாழ்ப்பாணம், புதன்

தமிழரசுச்கட்சி நடத்தவிருக்கும் நேரடி நடவடிக்கை இயக்கம் பற்றி இன்று நடைபெறும் தமிழரசுக்கட்சிப் பொதுக் கூட்டத்தில் வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நேரடி நடவடிக்கை எப்போது ஆரம்பிப்பதென்ற முடிவை தமிழரசுக்கட்சி நேரடி இயக்கக்குழு இன்னும் முடிவு செய்யவில்லை என்று அறியப்படுகிறது.

நேரடி நடவடிக்கை இன்று ஆரம்பிக்கப்படாத போதிலும் விரைவில் போராட்டம் ஆரம்பமாகும் எனத் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தெரிவித்திருந்தார். நேரடி நடவடிக்கைக் குழு போராட்டம் எப்போது ஆரம்பிப்பதென்று இறுதி முடிவு செய்யும்.

இன்றுமாலை தமிழரசுக்கட்சியினல் கோட்டை மைதானத்தில் சத்தியாக்கிரக நினைவு நாளையொட்டி பொதுக் கூட்டமொன்று கட்சித்தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமையில் நடத்தப்படவிருக்கிறது. இக்கூட்டத்தில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கட்சியுடன் ஒத்துழைத்தவர்களான உடுப்பிட்டி எம்.பி திரு. மு. சிவசிதம்பரம், வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் ஆகியோர் பிரதம பேச்சாளர்களாக அழைக்கப்பட்டுள்ளனர். கட்சி எம். பி.க்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுவார்கள்.

தமிழியக்கம் தொடர்ந்து எப்படி நடத்துவதென்பது இக்கூட்டத்தில் அறிவிக்கப்படுமெனவும் கட்சியின் அடுத்த நடவடிக்கைபற்றி அறிவிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எல்லாம் தமிழியக்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெற்று வருகின்றது.

இன்று நடைபெறும் கூட்டத்திற் கலந்து கொள்ளுமுகமாக கிழக்கு மாகாண தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் இன்று யாழ்ப்பாணம் வருவர் எனத் தெரிகிறது.

## திருநாவுக்கரசர் குருபூசை

யாழ்ப்பாணம், புதன்

திருநாவுக்கரசு நாயனர் குருபூசை வைபவம் வண்ணை நாவலர் பாடசாலையில் 20-4-63-ல் நடைபெறவிருக்கிறது. அன்று நண்பகல் மகேஸ்வர பூசையும் நிகழும்.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

கிங்ஸ்லி ரீளாஸா வெலிங்டன் விஜயா

(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்)(மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

சபாஸ் சந்திரபாபு என.......

நாடும் ஏடும் வாழ்த்துகிறது

நடிப்புலகம் போற்றுகிறது

காணத்தயாராகுங்கள்



★ சந்திரபாபு,
★ எம். என். ராஜம்
★ டி. எஸ். பாலையா
★ கே. சூரியகலா
★ ரி எஸ். துரைராஜ்
★ பி. எஸ். ஞானம்
★ ஜாவர்சீதாராமன்
சி டி. ராஜகாந்தம்
★ கள்ளபார்ட் நடராஜ்

மற்றும் பலர் நடித்த

சிவகாமி பிக்சர்ஸ்

குமார ராஜா

திரைக்கதை-வசனம் முரசொலிமாறன் எம். ஏ. | இசை டி. ஆர். பாப்பா | டைரக்ஷன் ஜி கே. ராமு

நடனம் சாயி, சுப்புலட்சுமி, ஹெலன் | பின்னணி வி. என். சுந்தரம், பி. லீலா, ஜமுனராணி, ரத்தினமாலா, சூலமங்கலம் ராஜலட்சுமி, ரேணுகா, கஜலட்சுமி

மனேகரா

(யாழ்ப்பாணம்)

குருடட் — வஹிதா ரெஹ்மன்

நடித்த

டுவல் ஒ க்ளொக்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.